பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 02 | 28 ஒக்ரோபர் 2017 | விதி : 72



இடப்பெயர்வு தந்த வடுக்கள்



பிறந்த மேனிப் பிரியர்கள்




பரிமளத்தை தேடி



வாதரவத்தை, புத்தூர்

## யாருக்கு நீதி...?



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

பல சோதனைகளுக்கும் மத்தியில் வெளியாகி சாதனை படைத்து வருகிறது விஜயின் மெர்சல். ஆனால் படத்தில் பேசப்பட்ட வசனங்கள் தொடர்பில் மத்தியில் ஆளும் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் **2015** இல் விஜய் **25** கோடி ரூபா வரி ஏய்ப்பு செய்தார் என இந்திய வருமான வரித்துறையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



சுந்தர். சி இயக்கவுள்ள வரலாற்றுப் படமான சங்கமித்ரா படத்தின் நாயகியாக திஸா பதானியை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ்.

ஜெயம் ரவி, ஆர்யா ஆகியோர் நாயகர்களாக நடிக்கும் இந்தப் படத்தில் ஸ்ருதி ஹாசன் நடிக்கவிருந்தார். திடீரென அவர் விலகியதால் படம் குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

இந்நிலையில் பொலிவூட் நடிகை திஸா பதானியை நிறுவனம் அணுகியது. இதைத் தொடர்ந்து இப்போது உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



பாகுபலி புகழ் பி
“சாஹோ” படத்தின் முதல்
அண்மையில் வெளியிட
தமிழ், தெலுங்கில் த
படத்தின் முதல் பார்வை
2049” என்ற ஹொலிவூட்
போஸ்ரரின் கொப்பி என
சமூகவலைத்தளப் பதிவர்
இயக்குநரை வறுத்தெடுத்

ஹொ
வெயின்ஸ்
உட்படுத்த
இந்நிலை
எல்லாத் து
இது. அது
காரணம். தி
பாலியல் க
நாயகி உ
அனைவரு
வெளியிட்

பெரு
எஸ்.
வெளி
பட
கலா
கட
வெ
வெற்
“இந்த



– சந்திப்பு: றொக்ஷன் –

# யாருக்கு நீதி...?

யாழ். மேல் நீதிமன்றின் நியாயதிகார எல்லைக்குள் மிருக பலியிடல் அல்லது வேள்விக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. காலாதி காலமாக மக்களிடம் நிலவி வந்த நம்பிக்கைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து, அவர்கள் மத்தியில் இருக்கும் கருத்துக்களை பதிவு செய்வதே இதன் நோக்கமாகும். மாறாக நீதிமன்றத் தீர்ப்பை விவாதிப்பதாகவோ, விமர்சிப்பதாகவோ இப்பதிவு அமையவில்லை.



**முத்துத்தம்பி மகாலிங்கம்**

இங்கு (கவுணாவத்தை) வேள்வி நடந்து ரெண்டு வருசம் கடந்துவிட்டது. கோர்ட் திடிரெண்டு வேள்வியை நிற்பாட்டினதில எமக்கு செரியான கவலை, நேர்த்திக்கடன் கழிப்பதற்கும், வருத்தம், துன்பங்களால வாற பிரச்சினைகளுக்கு நேர்த்தி வைப்பதற்கு இந்த வேள்வி நடத்தப்பட்டு வந்தது. இப்ப இதை நிற்பாட்டி வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வேள்வி நேர்த்திக் கடனை கோர்ட் நிற்பாட்டினதால யாழ்ப்பாணத்தில் விபத்துக்கள், சண்டைகள் மூலம் பல விளைவுகளை இந்த அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வாற துன்பகளை-யேல்லாம் என்ர அப்பன் வைரவர் இவ்வளவு காலமும் பார்த்துக் கொண்டு வந்தவர். நாங்கள் இப்ப அவரை மறந்ததால அவரும் எங்களை மறந்திட்டார்.

நாங்கள் பிறக்க முன்னரே இவ்வாறான வேள்விகள் நடந்து கொண்டிருந்தது. இந்த வைரவர் பொல்லாதவர் நடந்த கொடிய சண்டைகளிலேயே இக்கோயில் தேசமடையவில்லை இங்குள்ள மரங்களும் சேதமடையவில்லை. எல்லாத்தையும் இந்த வைரவரே பார்த்துக் கொண்டிருந்தவர். வேள்வி வழமைபோல் வேள்வி நடத்தப்பட வேண்டும் அதுதான் எங்களோட ஆசை.



**தம்பித்துரை ஐயர்– செல்வக்குமாரன் ஐயர்**

இந்த வேள்வி வழிபாட்டு முறை என்பது இண்டைக்கு நேற்று நடந்த ஒன்றல்ல. இது காலம் காலமாக நடந்து கொண்டு வருகிறது. இதைத் திடீரெண்டு யாரும் குழப்பி விட முடியாது. இந்த வேள்வி செய்யிறதால இதுவரை காலமும் எந்தப் பிழையும் நடந்ததில்லை. முந்தி எல்லாக் கோயில்களிலும் இவ்வாறான வேள்விகள் நடந்து வந்துள்ளன. காலப் போக்கிலேயே அவை விடப்பட்டன. ஒவ்வொரு கோயில்களுக்கும் தனி அடையாளமுள்ளது. அதே போன்று கவுணாவத்தை நரசிங்க வைரவர் கோயிலின் தனி அடையாளமே இந்த வேள்விப் பூசைதான் அதை எம்மால் எப்படி நிற்பாட்ட முடியும். பழைமையான சம்பிரதாய முறைகளை எல்லாம் விட்டுப் போட்டு நாகரிகத்துக்கு வரவேண்டும் என்றால் எமது கலாசார இருப்பே இல்லாமல் போய்விடும். இங்கு வாழ்கின்ற எல்லா இனத்தவர்களும் தமது கலாசார விழுமியங்களைக் கட்டிக் காப்பாற்றி வருகின்ற நிலையில் எமது அடையாளங்களை ஒருபோதும் தொலைத்துவிட முடியாது.

பழமையை ஒருபோதும் மாற்ற முடியாது. அது எமது பண்பாடு, கலாசாரம் இதனைக் கட்டிக் காப்பாற்ற வேண்டியது எமது பாரம்பரிய பொறுப்பாகும். எல்லாக் கோயில்களிலும் நந்தி பலிபீடம் என்ற ஒன்று உள்ளது. தற்போதுள்ள விஞ்ஞான மாற்றமென்பது எமது பாரம்பரியத்தை அழிக்கிறது இதற்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம். இதுவரை காலமும் பூசை முறைகளோ கிரிகை முறைகளோ எமது பாரம்பரிய முறைமைகளில்தான் செய்து வருகின்றோம். நவீனம் வந்தவிட்டது என்று அதை நாம் மாற்றவில்லையே அப்படியாயின் பாரம்பரிய வேள்வி வழிபாட்டு முறையை ஏன் நாம் மாற்ற வேண்டும்? இந்த வேள்வியை ஒரு சடங்கு, சம்பிரதாயம் என்று பார்க்காமல் வியாபாரம், கேளிக்கை நிகழ்வு என்றுதான் பார்க்கப் படுகின்றது.

எந்தவொரு விடயத்தையும் எடுத்துக் கொண்டாலும் இரண்டு பக்க விவாதம் வரும். அதனை எவரும் பாதிக்காதபடி எவ்வாறு மாற்றலாம் என்று பார்க்க வேண்டும். அதை விடுத்து யாரும் கலாசாரத்தை அழிக்க முடியாது. வடக்கில் தற்பொழுது விபத்துக்கள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு இவ்வழிபாட்டு முறையின் தடங்களே காரணமாக இருக்கலாம் என்று நாம் நினைக்கின்றோம். பலர் நேர்த்திக் கடன் செலுத்துவதற்கு வேள்வியைச் செயய்வார்கள். ஒரு சிலர் வியாபார நோக்கத்துக்காக இவ்வாறான வேள்வியைச் செய்வார்கள். அந்தக் குற்றச்சாட்டை ஒட்டுமொத்தமாகச் சொல்ல முடியாது. இதனால நேர்த்தியும் பாதிக்கப்படுகிறது.

சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து ஒரு தம்பதியினர் தமது பிள்ளையின் உடல்நல ஆரோக்கியத்துக்காக இந்த நேர்த்தியைச் செய்வதற்காக இங்கு வந்துள்ளனர். தற்பொழுது ரெண்டு ஆண்டுகள் வேள்வி செய்வது தடைப்பட்டுள்ளதால் அவர்கள் வாங்கிய ஆட்டை வித்துப் போட்டு காசை கோயிலுக்குக் குடுத்துவிட்டுச் சென்றனர். அவர்களின் நேர்த்தி முழுமை பெறவில்லை அவர்களின் பிள்ளைக்கு ஏதாவது நடந்தால் யார் பொறுப்புக்கூற முடியும்.

**சுந்தரமூர்த்தி – கமலநாதன் (48)**

நாங்கள் பரம்பரை பரம்பரையாக அப்பான்ர அப்பாட காலத்தில இருந்து இந்த வேள்வியை நடத்திக் கொண்டு வருகிறோம். திடீரெண்டு இந்த வேள்வியை நிற்பாட்டினத்தால எல்லா இடங்கள்லையும் உயிர் பலி நடந்து கொண்டு வருகின்றது. இதை யாரும் விளங்கிக் கொள்வதில்லை. வைரவருக்கு நாங்கள் ஒண்டும் செய்யவில்லை என்றால் அதன் தாக்கம் மிகவும் உச்சமாக இருக்கும். இந்த கரும்பணை கவுணாவத்தை அந்திராணை நரசிங்க வைரவர் கோயில் அமைந்துள்ள காணி எங்கடதான் நான் பல தலைமுறைகளைப் பார்த்திட்டன் ஒருக்காலும் இப்படியோரு பிரச்சினை நடந்ததேயில்லை திடீரெண்டு வைரவரின் வேள்விப்பூசையை நிற்பாட்டி கோட்டில வழக்கும் போயக் கொண்டிருக்கிறது.

சங்கனையிலுள்ள பிரம்பத்தை, சில்லாலையிலுள்ள பேரம்பணை வைரவர் கோயில், வராலி, சித்தங்கேணி, உற்பட பல கோயில்களில் இந்த வேள்வி நடைபெற்று வந்தது. இது ஒரு வாழ்வியல் கிடாய் வளர்ப்பதும் அதை நேர்ந்து விடுவதும் இக்கிராமத்தின் கலாசாரமாகும் இளைஞர்கள் இதில் மும்மரமாக ஈடுபடுவார்கள். அவர்களிடத்தே இதனுடாக ஒத்திசைவு ஏற்பட்டிருக்கும் இதனால் அவர்கள் கலாசார பிறழ்வான செயலகளில் ஈடுபட மாட்டார்கள். இதனை ஒரு பாரம்பரிய நேர்த்தியாக ஒரு கலாசாரமாக பேணிக் காத்து வந்தார்கள். அந்தக்' காலத்தில் இங்கு படைக்கப்படும் வேள்வி இறைச்சிகளை கொழும்பிலிருந்து வந்து வாங்கிச் செல்வார்கள். அப்படியொரு வரலாறும் பெருமையும் இக்கோயிலுக்குண்டு அது ஒரு சில பேருக்கு விளங்குவதில்லை. இங்கு களியாட்டமோ? வியாபாரமோ? இல்லை. அப்படி சிலர் கதைக்கிறார்கள். இது ஒரு முற்றுமுழுதான விரத நேர்த்தியையே சார்ந்தது.



**கனகசபை மகேந்திரன் – 62**

கூடுதலாக விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படுபவர்கள்தான் இந்த வேள்வியை நடத்தி வருகின்றார்கள். இந்த வேள்வி வழிபாடு நம்பிக்கை, கலாசாரத்தைப் பின்னிப் பிணைந்துள்ளது. இதனை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். 1973ஆம் ஆண்டு காலப்பகுதியில் சூலம் வைத்து விழிபட்டு பின்னர் விக்கிரகம் வைத்து வழிபட்டு கரும்பணை கவுணாவத்தை அந்திராணை நரசிங்க வைரவர் கோயில் என்ற தனி அடையாளத்துடன் இக்கோயில் விளங்கிவருகிறது. அன்றிலிருந்தே இக்கோயிலில் வேள்வி நடைபெற்று வருகிறது. அப்பவே இந்த வழிபாட்டு முறைமையை நிற்பாட்டாமல் தொடர்ந்து செய்து வருகின்றோம் திடீரெண்டு நிற்பாட்டு என்றால் எப்படி?

1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் தழிழரசுக் கட்சியின் எம்பியாக இருந்த இராசதுரை பின்னர் யு.என்.பி யுடன் இணைந்து கொண்டு இந்து கலாசார விவகார அமைச்சராகப் இருந்தவர் அவர் அப்பொழுது இவ்வாறான வேள்விகளை நிற்பாட்டைச் சொல்லி நாடாளுமன்றில் கொண்டுவந்த பிரேரணை அமுல்படுத்தப்படவில்லை நாங்கள் அப்பொழுது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேள்வியை வழக்குப் போட்டு வெண்டனாங்கள். யுத்த இடப்பெயர்வுகளால் அதற்கான ஆவனத்தைத் தொலைத்து விட்டோம். 1996ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து திரும்ப 1998 இல் யாழ்ப்பாணம் வந்தனாங்கள். இப்பிரதேசத்தில் அப்பொழுது இராணுவம் இருந்தமையால் ஜீ.எல் ஊடாக விசேட அனுமதியைப் பெற்று இந்த வேள்வியைச் செய்து வந்தனாங்கள். தொடர்ந்து 2011இல் இருந்து முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதுடன் அன்றிலிருந்து தொடர்ந்து இந்த வேள்வியை செய்து வந்தனாங்கள். இதை தற்பொழுது நிற்பாட்டினதால பலபேர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

( 18 ஆம் பக்கம் பார்க்க)

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை




## வேள்வித் தடை

யாழ். மேல் நீதிமன்றத்தால் வேள்விக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து கடந்த வாரம் அதிகளவில் சமூகவலைத்தளங்களில் பேசப்பட்டது.

தடைக்கு ஒரு பகுதியினர் மகிழ்ச்சி தெரிவிக்க இன்னொரு பகுதியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். சிலர் வேள்வியின் ஆதிமூலத்தை கண்டறிந்தவர்களாக கதை பேசினார்கள். சிறுதொகையினர் தமிழனின் கலாசாரம், சமய நம்பிக்கை என்று கற்பிதம் கற்பித்தனர்.

இளவட்டங்கள் சிலர் “வேள்வி வேண்டும்” எனக் கோரும் விதத்தில் செயலி மூலமாக தங்கள் முகப்புப் படத்தை மாற்றி வைத்துப் போராடினர்.

“வேள்விக்குத் தடையாம் எனக்கும் ஒரு பங்கை போடு” என அர்த்தத்துடன் நக்கலடித்தவர்களும் சமூகவலைத்தளங்களில் இருக்கவே செய்தனர்.




## சூரனும் முருகனும்

கடந்த வாரம் கந்தசஷ்டி விரதம் என்பதால் சிலர் பக்திப் பழங்களாகி முருகன் படங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

சூரசம்ஹார நிகழ்வு படங்களே அதிகளவில் சமூகவலைத்தளங்களை ஆக்கிரமித்து நின்றன. சூரனுடன் செல்பி எடுத்தவர்களும். சூரன் தமிழன் வீரன் என்ற பதிவுகளையும் வலைத்தளங்களில் அதிகம் பார்க்க முடிந்தது.

முருக பக்தர்களின் எண்ணிக்கை நேரில் அதிகரித்ததோ இல்லையோ சமூகவலைத்தளங்களில் அது நிறையவே அதிகரித்திருந்தமையைக் காண முடிந்தது.






## சூடும் மர்மமும்

அரியாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்டமை பற்றிய தகவல்களும் அதிகளவில் ஆக்கிரமித்திருந்தன.

இது தொடர்பான படங்கள், வீடியோக்களை அதிகமானோர் பகிர்ந்திருந்தமையைக் காணமுடிந்தது.


சுட்டது யார்? ஏன்? எதற்கு?, என்பதை ஆராய்ச்சி செய்பவர்களாக - விடை தேடுபவர்களாக பலர் இருந்தனர். ஏழையின் பிள்ளைக்கு நீதி கிடையாதா?, பொலிஸார் ஏன் மௌனம்? என்ற விமர்சனங்களும் பலரால் முன்வைக்கப்பட்டன.














# புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com


## இனி ஒரு விதி செய்வோம்

தரம் கெட்டு விடக்கூடாது என்ற கரிசனையிலேயேதான் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடிவிடுமாறு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்? அப்படிப்பட்ட நாங்கள் ஏன் தனியார் வைத்தியசாலைகள் தரம் கெட்டுப் போகும்போது போராட்டம் நடத்துவதில்லை? அத்தகைய போக்கைக் கண்டித்துப் போராட்டம் நடத்துவதற்கு ஏன் பின்னடிக்கிறோம்? எந்தத் தளத்திலும் தரம் கெட்டுப் போகும்போது முடிவில் பாதிக்கப்படுவது மக்களே!

முன்சொன்ன விடயத்தில் தரம் பார்ப்பவர்கள் பின்னைய வற்றில் பார்க்கத் தயங்குவதும் அடிப்படையில் சுயநலமே. ஏனெனில் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் ஒவ்வொருவரினதும் இலக்கும், கனவும் தனியார் 'மருத்துவக் கடைகளே' என்பது எமக்குப் புரியாமலில்லை.

கடந்த வாரம் வடக்கின் பிரபல தனியார் வைத்தியசாலை யினதும், அதில் பணியாற்றிய வைத்திய அதிகாரியினதும் மற்றும் மருத்துவக் குழுவினதும் பொறுப்பற்ற போக்கால் அந்த வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை செய்து கொண்ட ஒன்பது பேருக்குக் கிருமித் தொற்று ஏற்பட்டு அவர்கள் மீள அழைக்கப்பட்டு இப்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் கண் சத்திர சிகிச்சைக்காகப் பெருமளவு பணத்தை தனியார் வைத்தியசாலைக்குச் செலுத்தி இருப்பதாகக் கூறியுள்ளனர். கண் பார்வை பெறுவதற்காகச் செய்யப்பட்ட அந்த சத்திர சிகிச்சையால் கண்ணையே இழந்து விடுவோமா? என்றும் அவர்கள் தமது அச்சத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

அடுத்த முக்கியமான விடயமும், ஆச்சரியமும் என்ன வென்றால் பிழையானதொரு சத்திர சிகிச்சையைச் செய்து விட்ட பின்னர் அதனால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் தொடர்ந்து நிவாரணம் கொடுப்பதற்கோ, மாற்றுச் சிகிச்சை அளிப்பதற்கோ அந்த வைத்தியசாலையில் அதற்குரிய வசதிகள் இல்லை என்பதேயாகும். அதனாலேயே அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.
அங்கே அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதாக வைத்தியசாலையின் இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

முழுக்க முழுக்க வியாபார நோக்கத்தோடு பொறுப்பற்ற முறையில் பெரும்பாலான தனியார் வைத்தியசாலைகளும் வைத்திய அதிகாரிகளும் செயற்படுவது இதன் மூலம் நிதர்சனமாகிறது. மேற் சொன்ன விடயம் அமெரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ நடைபெற்றிருக்குமானால்...! விளைவு மோசமானதாக இருந்திருக்கும். வைத்தியசாலையை இழுத்து மூடப்பட்டிருக்கலாம்? பொறுப்பான மருத்துவரும் விசாரணைக்கு உட்பட்டு தண்டனை பெற்றிருப்பார். இல்லையேல் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெருந்தொகை நட்டஈடாக கொடுக்குமாறு நீதிமன்றால் அறிவுறுத்தப்பட்டிருக்கும். ஆனால் அப்படியான ஒரு கட்டமைப்பு எம்மிடம் இல்லை: என்பது மிகப்பெரும் குறைபாடே. இதனைச் செய்வதற்கு மனம் இருக்கின்ற போதிலும் யாரும் முன்வருவதில்லை. காரணம் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையே.

தனியார் வைத்தியசாலையால் 9 பேர் பாதிக்கப்பட்ட விடயத்தை யாழ். போதனா வைத்தியசாலை உறுதிப்படுத்தியுள்ளது. எனவே இதுபோன்ற நடவடிக்கைகள் தொடராது இருக்க அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில்லை. பொதுநலன் சார்ந்த எவரும் எடுக்க முடியும். எனவே பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் முன்வந்து இவ்வாறான பிரச்சினைகள் நடக்காது இருக்க இனி ஒரு விதி செய்ய வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




# ஒரு புத்தக வெளியீடு

– நோக்கன் –

கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) இலங்கை வேந்தன் கல்லூரியில் நடந்த கவிதை நூல் வெளியீட்டிற்காகப் போயிருந் தேன். போராட்டத்திற்கு தோள் கொடுக்கப் போய் பயங்கரவாதி என்ற பட்டத்தைச் சுமந்த ஆயுள் கைதி, சிறைக் கம்பி களினூடாக உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவன். அவனால் எழுதப்பட்ட வைர வரிகள் அரங்கேறு வதைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறேன் என்று அறிந்ததும் என் மனம் பெருமை கொண்டது. நாட்களை எண்ணிக் கொண்டிருப்பவன். பேனாவினால் பேசுகிறான். காதலையும், நோதலையும் கவிதையாய் வடிக்கும் கனவான்கள் சூழ உள்ள இந்த உலகத்தில் ஒருவன் நிஜத்தைக் கவிதை வடிவிலே கொண்டு வருகிறான் என்றால்... அதுவும் தூக்கமற்ற இரவுகளைத் தனதாக்கிக் கொண்டு பேனாவினால் உங்களோடு பேசுகிறான் என்றால்...!

"சிறையிலிருந்து சிங்களச் சகோதரனுக்கு... " இதுதான் நூலின் தலைப்பு. தான் இன்னும் நம்பிக்கையை இழந்து விடவில்லை என்பதை தலைப்பினி லேயே சொல்லிவிடுகிறான் அவன். சமாதானத்தையே தானும் விரும்புகிறேன் எனச் சொல்கிறான். சிங்கள மக்கள் தனக்கு எதிரானவர்கள் இல்லை என்பதில்தான் தீர்க்கமான தெளிவு பெற்றிருப்பதை சொல்கிறான். அவன், ஒருபோதும் போராட விரும்பவில்லை என்பதையும் நிதானத்தோடு சொல்கிறான். போர் தனக்குள் வலிந்து திணிக்கப்பட்டதையே தன் கவிதைகளில் சுட்டி வடித்திருக்கிறான்.

துன்பங்களையும், துயரங்களையுமே அவனுக்கும் - அவனின் இனத்துக்கு கொடுத்தவர்களை இன்னமும் சகோதரனா கவே பார்க்க விளைவது எத்துணை மேன்மையானது. அவனுடனான நட்பையும் அவனுக்கான காத்திருப்பையும் நயவுற அழகாகச் சொல்வதற்கு அவன் விரும்புகிறான். இன்னும் அவன் கைகோர்த்து நடப்பதற்கு அவன் இதயத்தில் இடமுண்டு என்றதைத்தான் நோகாமல் சொல்கிறதாகவே எனக்குத் தோன்றுகிறது.

அரசு கதிரைகளே அவனை வஞ்சித்திருக் கின்றன. எதிர்பார்த்து ஏமாந்தபோதே அவன் போராடப் புறப்பட்டான். தன்னின அரசியல் தலைமைகளிலும் நம்பிக்கை இழந்ததன் விளைவே அவன் போராளியாக உருவெடுத்ததற்கான காரணம் எனலாம். அவனது அந்த நூலினூடாக எனது விழிகளின் பயணத்தைத் தொடர்ந்தபோது, ஓரிடத்தில் சட்டென நில் என்றது இதயம். நின்று பார்த்தேன்... படித்தேன்... என்னைத் தைத்தன இந்த வரிகள்...

### போர்

*தரப்படுத்தலில் பிறந்து*
*தாய் மொழியில் தவழ்ந்து*
*நிலப் பறிப்பில் நிமிர்ந்து*
*நேர்த்தியாக வளர்க்கப்பட்டது*
*நியாய விடுதலைப் போர்*
*பேச்சுவார்த்தையில்*
*பெற்றுவிடலாமென்று*
*விருப்பமாய் நின்று*
*மேடைகள் பேசிப் பேசி*
*சோரங்கள் போனது தான்*
*வரலாற்றுத் தவறாகி*
*வரவழைத்தது ஈழப்போரை*
*விடுதலைப் போரை விலைபேசி*
*பயங்கரவாதமெனப் பறைசாற்றி*
*வல்லரசுகளின் வலிமை கொண்டு*
*தமிழினப் புனிதப்போரைத்*
*தலை கீழாய் மாற்றியதால்*
*முள்ளிவாய்க்காலும்*
*முட்கம்பி வாழ்க்கையும்*
*மீதமாய்ப் போனது*
*நேச நாட்டுக் கத்திவத் தட்டி*
*நிம்மதியாய் வாழ நீதி கேட்டோம்*
*வன்முறை வார்ப்புகளால்*
*வெந்து துடி துடித்தோம்*
*வேடிக்கை பார்த்த வர்க்கம்*
*மீண்டும் முருங்கை ஏறி*
*பதின் மூன்றில் ஏதோ*
*பச்சிலை பறித்துப் பகர்வதாய்*
*பாசாங்கு காட்டுகிறது.*
*காணிகள் பறிப்பு*
*சக்திகள் சிறையிருப்பு*
*காணாமல் ஆக்கப்பட்டோர் கதை நீடிப்பு*
*ஈழ நிலமெங்கும் இராணுவக் குவிப்பு*
*என எம் மண்ணில் இன்றும்*
*நிழல் யுத்தம் நீளுகிறது.*
*வஞ்சிக்கப்படும் எமக்கு*
*வளமான தீர்வொன்று*
*கெஞ்சிக் கேட்டாலும்*
*கிஞ்சிற்றும் கிடைக்குமா?*
*கொஞ்சிக் குலாவும் இணக்க அரசியலால்*
*குலத்தைச் சீரழிக்கும்*
*கோடாரிக் காம்புகளின்*
*கனவுகள் பலித்திடுமா?.....*
*கொஞ்சம் சிந்திப்போம்*
*கொதித்தெழத் தேவை இல்லை*
*காந்தி வழிக் கொள்கை கொண்டு*
*கண்ணியமாய்ப் போராடி*
*கனமான தமிழினத்தை*
*கச்சிதமாய் வளர்த்திடுவோம்.*

தன்னிலையைப் புரிந்து கொள்ளாமல் தமிழினம் பயணிப்பதாகவே அவன் கருதுகிறான். வடுக்களை வருடிப் பார்த்தே வருவதையும் எதிர் கொள்ள வேண்டும் என்பது அவனது எண்ணம். கண்ணிமைக் கும் நேரம். ஒரு கணப்பொழுதில் நடந்து முடிந்த கதையாய்ப் போனது தமிழரின் போராட்டம். வறட்சியில் அற்றுப்போய் நீர் கண்டு துளிர்விடும் அறுகம் புல்லை ஏனோ ஞாபகப்படுத்துகிறது என் மனம். அதைத் தானே வாழ்க்கையின் வெற்றியெனலாம். இறுதியில் தமிழனுக்காக அவன் எழுதிய சில வரிகளுடன்...


### தமிழனுக்காக

*தமிழனை*
*தூக்கி வளர்ப்பதில் அல்ல*
*அவனை யார் ?*
*தூக்கிலுரிப்பது என்பதிலேயே*
*தொலைகிறது*
*இலங்கைத் தமிழனின்*
*இன வரலாறு!*

'சிறையிலிருந்து சிங்களச் சகோதரனுக்கு" என்ற புத்தகத்தை சிங்களச் சகோதரனுக்குப் படிக்கக் கொடுக்க முன்பு நாம் - தமிழர்கள்- அதைப் படிக்க வேண்டும். குறிப்பாக நமது அரசியல்வாதிகளுக்கு அதை வாங்கிப் பரிசளிப்பீர்களானால் அதுவே சதீஸூக்கு நாம் செய்யக் கூடிய கைமாறு?

# பரிமளத்தைத் தேடி...

- சிக்மலிங்கம் றெஜினோல்ட் -



அண்டைக்குப் பொழுது இருட்டின பிறகும் பரிமளம் வீட்டுக்கு வரேல்ல. ஒரு நாளும் இப்பிடி நேரம் பிந்தி அவள் வாறதேயில்லை. மிஞ்சினால் ஆறு, ஆறரைக்குள்ள கொலுசுச் சத்தம் கேட்கிறதைப்போல அவளுடைய கழுத்தில இருக்கிற மணியும் சங்கும் கலந்தொலிக்கும். இண்டைக்கு அந்தச் சத்தமேயில்லை. இப்ப ஏழுக்கு மணிக்கு மேலாகியும் அவள் வரேல்லயெண்டால்.....?

அம்மா சரியா அந்தரப்படத் தொடங்கீட்டா. அவவுக்கு அழுகை தொண்டைக்குள் வந்து சிக்கி நிண்டது. அதை, அந்தக் கண்களைப் பாக்கவே தெரிஞ்சிது. அவ ஆசையாள் வளர்த்த பிள்ளையல்லோ! எனக்கும் அப்பிடித்தான். பரிமளத்தைப் பாக்காமல், அவளோட சண்டை போட்டு விளையாடாமல், ஒரு நாளும் நான் பள்ளிக்கூடம் போனதேயில்லை.

இப்ப என்ன செய்யிறது? எங்க போய்த் தேடிறது? ஆரிட்ட விசாரிக்கிறது? அண்டைக்கெண்டு பார்த்து அய்யாவும் வீட்டில இல்லை. ஐயா நிண்டாரெண்டால் இந்நேரம் பரிமளத்தைத் தேடிக் கொண்டு வெளிக்கிட்டிருப்பார். அவளில ஐயாவுக்கும் உயிர்.

இப்ப ஆரை விட்டுப் பரிமளத்தைத் தேடிறது எண்டு அம்மாவுக்கு விளங்கேல்ல. பெரியய்யாவை விட்டுப் பார்க்கலாம். அவரெண்டால், அச்சொட்டாக அந்த இடத்துக்குப் போய்ப் பார்ப்பார். பரிமளம் போற வாற இடமெல்லாம் அவருக்குத் தெரியும். அதோட அவள் அங்க இங்க நிண்டால் அவளின்ரை பொச்சையை வைச்சே அவள் நிக்கிற இடத்தைக் கண்டு பிடிச்சிடுவார். காலடி பாக்கிறதிலயும் ஆள் வலு விண்ணன். காலடியை வைச்சே எங்க போயிருப்பாள்? எப்ப போயிருப்பாள்? எண்டதை யெல்லாம் அறிஞ்சிடுவார்.

ஆனால், நாங்கள் அறிய பெரியய்யாவிடம் அம்மா எதையுமே கேட்டதில்லை. அம்மாவாக அவரோட ஒரு நாளும் கதைச்சதையும் நாங்கள் காணேல்ல. ஆனால், அவரில நல்ல மதிப்பும் பிரியமும் இருந்தது. "அத்தான் நல்ல மனுசன், அவரிட்ட ஆரும் எதுக்கும் போனால், மறுக்காமல், மனங்கோணாமல் அதைச் செய்து குடுப்பார். அவற்றை கைராசியில எதெண்டாலும் நல்லாத்தான் வரும். வைத்தியமெண்டாலும் சரி. பயிர் கொடி நடுகிறதெண்டாலும் சரி...." எண்டு அவரைப் பற்றி அன்பாயும் மதிப்பாயும் நல்லாய்த்தான் சொல்லுவா.

பெரியய்யாவும் அம்மாவோட கண்டபடியெல்லாம் கதைக்கிறேல்ல. ஏதும் அலுவலெண்டால், இல்லாட்டிக்கு ஏதாவது தேவையெண்டால் மட்டும் "பாக்கியம், இஞ்ச ஒருக்கா வாறியே, இதை ஒருக்காக் கொண்டுபோய்க் கொக்காட்டைக்குடு" எண்டோ, "பாக்கியம், கொக்காட்டைச் சொல்லியிருக்கிறன். வெட்டுக்கட்டைக் காணியில நடக்கிற வேலைக் கணக்கை ஒருக்கால் பாத்து வை" எண்டோ ஏதாவது அலுவலைச் சொல்லிப் போட்டுப்போவார். எல்லாத்துக்கும் "கொக்கா, கொக்கா" எண்டு, பெரியம்மாவோட சேர்த்துத்தான் எதையாவது சொல்லுவார். அது அவரின்ரை பழக்கமா அல்லது ஒரு பாதுகாப்பு ஏற்பாடா எண்டு தெரியாது.

இப்பிடி அளந்து கட்டினமாதிரி இருக்கிற உறவில எப்பிடிப் போய்ப் பெரியய்யாவிட்டப் போய், "பரிமளத்தைக் காணேல்ல அத்தான். ஒருக்கா அவளைத் தேடிப்பாக் கேலுமே!" எண்டு கேட்கிறது? ஆனால், அவரைக் கேட்கிறதை இப்ப விட வேற வழியுமில்லை. பரிமளத்தோட அவளின்ரை இரணைக் குட்டியளும் கோதையும் பெரிய கறுப்பியும் எண்டு மொத்தம் அஞ்சு உருப்படி.

அம்மா வெளிக்கிட்டுப் பெரியம்மாவிடம் போனா. நானும் கூடப்போனன். அம்மா விபரத்தைச் சொன்னா. அதைக் கேட்ட பெரியம்மா, "மெய்யே, இஞ்சருங்கோ..." எண்டு பெரியய்யாவைக் கூப்பிட்டு அவரிட்ட விபரத்தைச் சொன்னா. எல்லாத்தையும் கேட்டவர், "தனியப் பரிமளம்தான் வரேல்லயோ இல்லாட்டி வேற உருப்படியுமா?" எண்டு கேட்டார். "பரிமளத்தோட அஞ்சு" எண்டேன் நான்.

"வெங்கிணாந்தி பிடிக்கிறதெண்டாலும் ஒண்டைத்தான் பிடிக்கும். நரி கிரிதான் பிடிச்சாலும் ஒண்டு ரெண்டுக்கு மேல போறதுக்கு ஞாயமில்லை. வழி மாறிப்போறதுக்கும் வாய்ப்பில்லை. பட்டி பிரிஞ்சு தனியாப் போறதெண்டால் நாயோ நரியோ கலைச்சிருக்க வேணும்... எதுக்கும் ஒருக்காப் போய்ப்பாப்பம். சிவராசா எங்க?" எண்டு அய்யாவைப் பற்றிக் கேட்டார்.

அவர் இடைக்காட்டுக்கு ஒரு அலுவலாக இடைக்காட்டுக்குப் போட்டார். நாளைக்குத்தான் வருவார்" எண்டா அம்மா.

அதுக்கு மேல எதுவுமே பேசாமல். கொடியில கிடந்த சால்வைத் துண்டை எடுத்துத் தோளில போட்டார் பெரியய்யா. தைலாப் பெட்டியைத் திறந்து வில்லுக் கத்தியை எடுத்து ஒரு தடவை விரித்துப் பார்த்து விட்டு மடக்கி, மடிக்குள் சொருகினார். மான் கொம்புப் பிடி போட்ட கத்தியைக் கையில எடுத்தார். வேட்டைத்தடியை எடுத்து என்னட்டைத் தந்தார். மற்றக் கையில் அஞ்சு பற்றறி எவரெடி ரோச் லைற்றை எடுத்தார். சின்னண்ணாவைக் கூப்பிட்டுக் கூட வரச்சொன்னார். வீமனைக் கூப்பிட்டார். வீமனைக் கூப்பிட்டால் சிங்கனும் வந்து காலடியில நிற்பான். இப்பவும் அப்படித்தான். வந்து காலுக்கு முன்னால நிண்டான்.

எல்லாரையும் கூட்டிக் கொண்டு பின் கடவையால கொல்லைக்குப் போய், அதுக்கு மேல இருக்கிற கடப்பால கடந்து ஒழுங்கையில இறங்கி நடந்தார். கூட நாங்கள் நடந்தோம்.

மணல் ஒழுங்கை எண்டபடியால் ஒருத்தருமே செருப்புப் போடேல்ல. சறக் சறக் எண்ட சத்தத்தோட கால்கள் மணலில் புதைந்து புதைந்து மெழுந்தன. சில் வண்டுச் சத்தம் இருளைக் கிழிக்கிற மாதிரிக் கேட்டுக்கொண்டிருந்தது.

நானும் சின்னண்ணாவும் மெல்லிதாகக் குசுகுசுத்துக் கதைச்சுக் கொண்டு ஓட்டமும் நடையுமாக பெரியய்யாவுக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தோம். வீமனும் சிங்கனும் முன்னுக்கு ஓடிறதும் பின்னுக்கு நிண்டு மோப்பம் பிடிக்கிறதுமாக வந்து கொண்டிருந்தான்கள்.

பெரிய தோட்டத்தைக் கடந்து, வெட்டுக்காட்டுக்குள்ளால் போய், குளத்துக்கு வடக்கேயுள்ள ஆலமரத் தடியால் நடந்து, சாம்பல் பிட்டிக்குப் பக்கத்துக்கு வந்து சேர்ந்திருந்தம். இடைக்கிடை லைற்றை அடிச்சு காலடியை ஆராஞ்சு கொண்டு வந்தார் பெரியய்யா. அப்பிடி வந்தவர், ஒரிடத்தில நிண்டார்.

நிண்டு, சுற்றுமுற்றும் லைற்றை அடிச்சுப் பார்த்தார். சாம்பல் பிட்டியடியில் பெரிய பத்தை வளர்ந்திருந்தது. பத்தைகளின் நடுவே மணல் ஒழுங்கை உறைந்து போன ஆற்றைப்போலப் படுத்திருந்தது.

ஒழுங்கையில் ஒரிடத்தில நிலம் ஈரமாக இருந்தது. அப்பிடியே கீழ நிலத்தில குனிஞ்சு அந்த ஈரத்தைக் காற் பெருவிரலால் தொட்டுப் பார்த்தார். பிறகு பக்கத்தில நிண்ட பத்தையில குச்சியொண்டை முறிச்சு, அந்த ஈரத்தில தொட்டு மணந்தார்.

"ஆட்டு மூத்திரந்தான், இன்னும் சூடாறேல்ல" எண்டார்.

பிறகு, மெதுவாக அந்தப் பக்கமாகவே கவனிச்சுக் கொண்டு நடந்தார். லைற் சுற்றுமுற்றும் தேடிக்கொண்டிருந்தது.

ஒரு இடத்தில பிழுக்கைகள் சிந்திக் கிடந்தன. அதைக்கையால் எடுத்துப் பிசைந்து பார்த்தார். மெல்லிதாக முகம் சுழித்தது. அந்த முகச்சுழிப்புக்குக் காரணம், பிழுக்கை மணமாக இருக்க வேணும். ஆனால், உடனே சட்டென ஒரு பிரகாசம். அந்த இருட்டிலும் அவருடைய முகத்தில் அடைந்த மாற்றத்தைக் கண்டேன். அவருக்கு ஏதோ விளங்கீட்டுது.

சலமும் பிழுக்கையும் சிந்தப்பட்டிருக்கிறதைப் பார்த்தால், ஏதோ அந்தரம் நடந்திருக்கெண்டுதான் படுது. அவதிப்பட்டுக் கொண்டு பிழுக்கையை மிதிச்சுக் கொண்டு ஆரோ போன காலடியும் தெரிஞ்சுது. அதைத்தான் பெரியய்யா அடையாளம் கண்டிருக்கிறார் போல.

காலடியைக் கண்டதோட அந்த மணற் பாதையில் விறுக் விறுக்கெண்டு நடந்தார். அவற்றை வேகத்துக்கு எங்களால ஈடுகுடுத்து நடக்கேலாமக் கிடந்தது. எண்டாலும் இப்பிடியே நிக்க முடியுமா? போகத்தானே வேணும். ஓடிக் கொண்டிருந்தோம். அப்ப நேரம் எட்டரைக்கு மேல இருக்கும். காட்டுப் புச்சிகள் கத்திக் கொண்டிருந்தன. இருண்ட வானத்தில வௌவாலோ வேறு ஏதோ பறவைகளோ தெரியாது. கறுப்பாகப் பறந்து போறது தெரிஞ்சுது. நிண்டு கவனிக்கிறதுக்கு நேரமில்லை.

இப்ப நாங்கள் புவாஞ்சிக் குளத்தைக் கடந்து சிவானந்தபுரத்துக்குக் கிட்ட வந்திட்டம். வெள்ளை வெளி மணல் அந்த இருளிலும் வெள்ளையாகத் தெரிந்தது. அங்க இருக்கிற சின்னச் சின்னப் பத்தைகள் எல்லாம் ஏதோ சின்ன மலைக் குன்றுகளைப்போலக் கறுப்பாகத் தெரிந்தன.

வழியில ஆறுமுகம் எதிர்ப்பட்டார். பெரியய்யா குரலைக் காட்டவில்லை. அதால இருட்டில போற ஆக்கள் ஆரெண்டு அடையாளம் தெரியாமல்

( 18 ஆம் பக்கம் பார்க்க)



# புதுவிதி PUTHU VITHI நடத்தும்

# பரிசு மழை போட்டி - 01 -

## முதல் சுற்றின் முதலாம் பரிசுக்கான வினாக்கள் - 28.10.2017

**01.** ஐ.நா. சபையில் 'வீற்றோ' அதிகாரம் கொண்ட நாடுகள் எவை?

**02.** "உலகில் எங்கெல்லாமோ போரிட்டோம். ஆனால் இந்த மன்னனிடம் கண்ட மாவீரத்தை வேறெந்த அரசரிடமும் காணவில்லை" என ஒல்லாந்தரான லூயி புகழ்ந்த ஈழ மன்னன் யார்?

**03.** கடல் பயணத்தின் போது நேரத்தை துல்லியமாக அளக்கப் பயன்படும் கருவி எது?

**04.** உலகின் முதல் வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட்ட நாடு எது?

01. ..............................................................

..............................................................

02. ..............................................................

..............................................................

03. ..............................................................

..............................................................

04. ..............................................................

..............................................................

**போட்டிக் கூப்பன்**

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தே.அ.அ.இல : ..............................................................

பாடசாலை : ..............................................................
(மாணவராயின்)

தொலைபேசி இல : ..............................................................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 11.11.2017**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.




**அனுப்ப வேண்டிய முகவரி**

**புதுவிதி**
**கரடிப்போக்கு சந்தி,**
**கிளிநொச்சி.**

**உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்**

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 07)



# புத்தூர், வாதரவத்தை

- வல்வை [illegible]வி -

ஈழத்திலுள்ள மண் வாசனை கமழுகின்ற தேசங்களுள் புத்தூர் மற்றும் வாதரவத்தை கிராமங்களுக்கும் முக்கியமான சிறப்புண்டு. வட இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அடங்கியுள்ள ஓர் ஊரே புத்தூர். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டிக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ளது. அதேவேளை புத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களுள் வாதரவத்தை என்ற விவசாயக் கிராமமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

புத்தூர் - புதூர் எனுவும் குறிப்பிடப்படுவதுண்டு. இவ்வூரப் பெயரில் இந்தியாவிலும் ஈழத்திலும் வேறு சில பகுதிகளிலும் உள்ள இடங்கள் அழைக்கப்பட்டு வந்துள்ளன. இந்தப் புத்தூரின் கிழக்குப் பகுதியில் வாதரவத்தை அமைந்துள்ளது. வாதுரு காற்று : வாதுமை ஒரு மரம், பண்டை நாளில் (வாமை) வாதுர மரத்தினால் வள்ளம் (வத்தை) கட்டித் தொண்டைமானாற்றினூடாக உப்பேற்றிச் சென்றதாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதற்குச் சான்று சேர்ப்பதாக இக்கிராமத்தின் ஒரு பகுதியில் இன்றும் உப்பு விளைவதற்கு ஏற்றாற்போல் உப்பு உறைந்த பாளங்கள் காட்சியளிக்கின்றன.


முன்னர் வாதரவத்தைக் கிராமத்தில் வற்றாளை மற்றும் நெல் என்பன சிறப்பாக செய்கை பண்ணப்பட்டதாகவும் அவற்றை வாங்குவதற்கு தென்னிலங்கை வியாபாரிகள் விரும்பி வருவதாகவும் இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர். தென்னிலங்கை வியாபாரிகளுடன் கொடுக்கல், வாங்கல்கள் காரணமாக வாதரவத்தை என்றும் பெயர் இக்கிராமத்திற்கு வந்ததாகக் கூறலாம். இக்கிராம விவசாயிகளிடம் வற்றாளைக் கிழங்கு வாங்குவதற்கு ஒரு சிங்கள வியாபாரி வந்த வேளை உள்ளூர் வியாபாரிகள் கைவசம் வற்றாளைக் கிழங்கு இல்லாததால் வா - தர - வத்தைக்கு எனக் கூறியதாகவும், வா - தாறேன் - வத்தைக்கு (வத்தை என்பது சிங்களத்தில் தோட்டத்தைக் குறிக்கும்) என்பதாகும். இதுவே பின்னாளில் வாதரவத்தை என்பதாயிற்றும் என்பர்.

வாதரவத்தை கிராம மக்களது பூர்வீகக் குடிகள் தானியங்கள், உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணும் நோக்கில் நன்னீர், மண்வளம் மிக்க பகுதியாக இருந்த வாதரவத்தைக்கு ஆவரங்கால், 10 ஆம் கட்டைப் பகுதி மக்கள் கரவெட்டிப் பகுதியினர் முதலானோர் வந்து சென்றதாகவும் பின்னர் தமது பயிர் வகைகளைக் காவல் செய்யும் நோக்கில் தங்கிப் பின்னாளில் அங்கு குடியேற்றங்களை நிறுவினர். இவர்களே இக்கிராம வாசிகளின் பூர்வீகம் எனலாம். இதனைப் பழைய காணிகளின் உறுதிகள் சான்றுபடுத்துவதாகவுமுள்ளன.

இந்து நெறி தளைத்தோங்கும் பகுதியான வாதரவத்தையில் கலைகளுக்கும் குறைவில்லை. பப்ரவாகன் கூத்து, துரியோதனன் கூத்து, திரௌபதை கூத்து, வசந்தன் கூத்து மற்றும் கரகம், காவடி, கலையாடுதல், குறி சொல்லுதல் முதலானவை சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

குருவிக்காடு என்றழைக்கப்படும் - குருவிகள் செறிந்து வாழும் காடும் இங்கிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை 'ஆட்டுப்பட்டி." எனும் பகுதியில் 7 வெந்நீர் ஊற்றுக்கான அறிகுறிகளுடன் ஓரிடத்தில் சிறு சிறு கிணறுகள் காணப்பட்டதாகவும் இங்கிருந்து இரவில், சப்த கன்னியர் பாடியாடி சென்று வருவதாகவும் அதனைத் தாம் கண்ணுற்றதாகவும் அங்குள்ள வயது முதிர்ந்த பெண்மணி ஒருவர் கூறுகின்றார். ஆனால் இன்று 7 கிணறுகளும் ஒன்றாகவே காணப்படுகின்றது. அதுவும் பராமரிப்பின்றி சிதைவுற்றிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. இங்கு மாணிக்கப் பிள்ளையார் கோவில் காணப்படுவதையும் இது ஆரம்பத்தில் தாளை மரங்களாலேயே மண்டபங்கள் போல் இயற்கையாகவே அமையப் பெற்றிருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர்.

வாதரவத்தையில் 1987 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழ் இளைஞர்களது பாதுகாப்பு இடமாகவும் இருந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இங்குள்ள மக்களுக்கு நிரந்தர இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்தனர். இந்திய இராணுவம் வாதரவத்தை தகரப் பிள்ளையார் வீதியில் ஏராளமானோரை சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர். இதன் நினைவாக இங்கு ஒரு தூபி 1990 ஆம் ஆண்டு



அமைக்கப்பட்டது. பின்னர் அழிக்கப்பட்ட இந்தத் தூபி 2002 ஆம் ஆண்டு மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல வகைகளிலும் செல்வாக்குமிக்க பகுதியாகப் புத்தூர், வாதரவத்தைக் கிராமம் மண்வாசனை வீசி வருவது யாவரும் அறிந்ததே.

# வாரப்பலன்

## மேடம்
தரகு, ஒப்பந்த வழிகளில் பணம் வரும், வேலைச்சுமை குறையும், எதிலும் நிதானம் தேவை, மனதில் குழப்பங்கள் ஏற்படும், கணவன், மனைவி இடையே மனக்கசப்புக்கள் ஏற்படும்.

**சிவபெருமானை வழிபடுங்கள்.**

## துலாம்
குறிக்கோள் நிறைவேறும், சொத்துப் பிரச்சினைகள் நீங்கும், ஆபரண சேர்க்கை உண்டு, அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள், தொழில் சாதகமாக இருக்கும், அரச வேலைகளில் அலைச்சல் ஏற்படும். **பத்திரகாளியை வழிபடுங்கள்.**

## ரிஷபம்
இலகுவாக காரியம் சாதிப்பீர்கள், பிள்ளைகள் வழியில் செலவு உண்டு, சுபச்செய்திகள் வந்து சேரும், சொத்துப் பிச்சினைகள் தீரும், அலுவலகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**நடராஜரை வழிபடுங்கள்.**

## விருச்சிகம்
எதிர்பார்ப்புகள் நிறைவேறும், கடன் பணம் வசூலாகும், கடனை அடைப்பீர்கள், அலுவலகத்தில் உங்கள் கை ஓங்கும், மாமனார் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

**ஆண்டாளை வழிபடுங்கள்.**

## மிதுனம்
எதையும் சமாளிப்பீர்கள், வீண் செலவுகள் ஏற்படும், உணர்ச்சி வசப்படுவீர்கள், பொன், பொருள் சேர்க்கை உண்டு, வராத பணம் வசூலாகும், புதிய வேலை வாய்ப்புக்கள் உண்டு.

**பெருமானை வழிபடுங்கள்.**

## தனுசு
செல்வாக்கும் சொல்வாக்கும் உயரும், வழக்கில் கவனமாக இருப்பது அவசியம். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். வியாபாரம் சீராக நடக்கும். பணப்புழக்கம் உண்டு.

**அம்பிகையை வழிபடுங்கள்.**

## கடகம்
வீடு காணி வாங்க அல்லது விற்க இருந்த தடைகள் நீங்கும், உறவுகளிடையே செல்வாக்கு கூடும், குழந்தை பாக்கியம் உண்டு,வழக்கில் சமாதானம் கிட்டும், தொழில் சாதகமாக இருக்கும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

## மகரம்
குழந்தைப் பாக்கியம் கிட்டும், எதையும் திடமாக எதிர்கொள்வீர்கள், சொத்து வாங்கும் யோகம் உள்ளது, வேலை கிடைக்கும், தாயார் உடல்நலம் சீராகும், உயர் பதவியில் இருக்கும் நண்பர்கள் உதவுவர்.

**ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.**

## சிம்மம்
பிறரின் விடயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும், அவசர தேவைகளுக்கு கடன்படுவீர்கள், கண் சம்பந்தப்பட்ட உபாதைகள் வந்து நீங்கும், திருமணப் பேச்சுக்கள் ஏற்படும், வியாபாரம் சீராக இருக்கும். **விநாயகரை வழிபடுங்கள்.**

## கும்பம்
அலைச்சல், கவலைகள் நீங்கும், சுப நிகழ்வுகள் நடக்கும், மனைவியின் உடல்நலம் பாதிக்கப்படலாம், தொழில் சிறப்பாக நடக்கும்.

**விஷ்ணுவை வழிபடுங்கள்**

## கன்னி
பண வரவு அதிகரிக்கும், சாதக, பாதகமான நிலை காணப்படும், பெண்கள் நகைகள் வாங்கி மகிழ்வர், இடமாற்றம் ஏற்படலாம், அலுவலகத்தில் இயல்பான நிலை இருக்கும்.

**முருகனை வழிபடுங்கள்.**

## மீனம்
பணம் புரளும், அநாவசிய செலவுகள் வரும், கண் கோளாறுகளை கவனியுங்கள், எதிர்பார்த்த சுப செய்தி கிட்டும், மனவருத்தங்கள் நீங்கும்.

**சிவபெருமானை வழிபடுங்கள்.**





இந்திய இராணுவத்தால் யாழ்.போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட 68பேரின் 30ஆவது நினைவுதினம் கடந்த 21ஆம் திகதி வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டபோது...




வட மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனால் வலி. வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 15 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு பொருட்கள் கடந்த 20ஆம் திகதி வழங்கப்பட்டபோது...




"1000 கவிஞர்கள் கவிதைகள்" கவிநூல் வெளியீட்டு விழா கடந்த 21ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது...



அரசியல் யாப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம் மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றபோது...




2016 இல் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த யாழ்.பல்கலை மாணவர்களான சுலக்ஷன் மற்றும் கஜனின் முதலாவது நினைவுதினம் கடந்த 20ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டபோது...






# அம்மாவிடம் சிக்கிய பூதம்

காட்டின் எல்லையில் இருந்த கிராமத்தில் வசித்து வந்தாள் குறும்புக் கார ஜானு. சாப்பிட, குளிக்க, விளை யாட என்று எல்லாவற்றுக்கும் பிடிவாதம் செய்வாள்.

அன்று இரவு ஜானுவுக்குச் சோறு ஊட்ட ஆரம்பித்தார் அம்மா. வழக்கம்போல் சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடித்தாள்.

"ஜானு, சாப்பிட்டால்தான் அம்மா மாதிரி பெரிய ஆளாக வளரலாம்."

"ம்ஹூம்" எனக்குச் சாப்பாடு வேண்டாம்."

"சாப்பிடலைன்னா நரி கிட்ட பிடிச்சுக் கொடுத்துடுவேன்" என்று அம்மா மிரட்டிக்கொண்டிருக்கும்போது, அந்த வழியே நரி ஒன்று வந்தது.

"ஆஹா! எத்தனை நாளுக்குத்தான் நண்டுகளைச் சாப்பிடறது? இன்னிக்கு நல்ல விருந்து!' என்று மகிழ்ச்சியடைந்தது நரி.

இரவு முழுவதும் காத்திருந்து ஏமாற்றமடைந்த நரி; மறுநாள் பார்த்துக் கொள்ளலாம் என்று காட்டை நோக்கி ஓடிவிட்டது. மறுநாள் குளிக்க அடம்பிடித்துக் கொண்டிருந்தாள் ஜானு.

"குளிக்க வரலைன்னா உன்னை பூதம்கிட்ட பிடிச்சிக் கொடுத்துடுவேன்!" என்று அம்மா சொல்வதை மரத்தில் இருந்த பூதம் கேட்டுக்கொண்டிருந்தது.

'அடடா! நல்ல விருந்து!' என்று பூதம் நினைத்துக்கொண்டது.

அன்று இரவு வீட்டுக் கதவைத் தட்டியது நரி. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த அம்மா திடுக்கிட்டார்.

"என்ன அம்மா, சொல்றீங்களே தவிர செய்ய மாட்டேங்கிறீங்க! நான் எவ்வளவு நேரம் காத்துக்கிட்டு இருக்கிறது? குழந்தையைக் கொடுங்க" என்று கேட்டது நரி.

அம்மாவுக்குப் பயம் வந்துவிட்டது. 'குழந்தையை மிரட்ட விளையாட்டுக்-குச் சொன்னால் நரி வந்து நிற்கும் என்று நான் நினைக் கவில்லையே!' என்று பதறினாலும் சமாளிக்க முடிவு செய்தார்.

"நரியாரே, அஞ்சு நிமிஷம் கழிச்சு பின்னால உள்ள வயலுக்கு வாங்க. நீங்க கேட்டதைக் கொடுத்துடறேன் " என்று சொல்லிவிட்டு, ஒரு பையில் கற்களை அடைத்தார். வயலில் தூக்கி எறிந்தார். ஜானுவைக் கிள்ளிவிட்டார். அழுகை சத்தம் கேட்டவுடன் நரி ஆவலோடு வயலுக்குள் பாய்ந்தது.

அந்த வயலுக்குச் சொந்தக்காரர் இரவில் விலங்குகள் வந்து பயிர்களைப் பாழ்படுத்தாமல் இருப்பதற்காகக் குழி தோண்டி பொறி வைத்திருந்தார். பொறியில் வசமாகச் சிக்கிக்கொண்டது நரி.

தப்பித்தோம் என்று பெருமூச்சு விட்டார் அம்மா. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த பூதம், நரியைப்போல நான் ஏமாறக் கூடாது என்று நினைத்துக்கொண்டது.

மறுநாள் அம்மா ஜானுவுக்குச் சோறு ஊட்டிக்கொண்டிருக்கும் போது வாசலில் வந்துநின்றது பூதம். நடுங்கிப் போனார் அம்மா.

"யார் நீ! என்ன வேண்டும்?"

"நீங்க சொன்ன பூதம் நான்தான். குழந்தையைப் பிடிச்சுட்டுப் போக வந்திருக்கேன்!"

"ஓ" அப்படியா! நீ அங்கேயே இரு. சரியா சாப்பிடா விட்டால் குழந்தையைத் தூக்கிப் போடுறேன்" என்று சொல்லிவிட்டு, இரும்புச் சங்கிலியை எடுத்தார், ஓர் இரும்புக் குண்டை அடுப்பில் போட்டார்.

"சீக்கிரம் வெளியே அனுப்பு" என்று கத்தியது பூதம்.

"இந்த உருவத்தில் இருந்தால் குழந்தை பயப்படும்."

"சரி, நாயாக மாறிடறேன்" என்ற பூதம், சட்டென்று உருவம் மாறியது.

"உன்னைச் சங்கிலியால் கட்டினால்-தான் குழந்தை நம்பும்."

"சரி, கட்டு."

சங்கிலியால் நாயைக் கட்டிப் போட்டார் அம்மா.

"இப்போது நான் போடும் பந்தைப் பிடித்து குழந்தைக்கு விளையாட்டு காட்டு! அப்போதுதான் குழந்தை உன்கிட்ட வரும்."

பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குண்டை கரண்டியிலிருந்து வீசினார். நாய் வேடத்தில் இருந்த பூதம் அதை வாயில் கவ்வியது.

"ஆ' ஐயோ' ஐயோ" என்று அலறியது.

சங்கிலியால் கட்டப்பட்டதால் தப்பிக்க முடியாமல் தவித்தது பூதம்.


"இனி இந்தப் பக்கம் திரும்ப மாட்டேன். என்னை அவிழ்த்துவிடு" என்று கெஞ்சியது அது.

ஜானு கைதட்டிச் சிரித்தாள்.

பூதத்தை அவிழ்த்து விட்டபடி, "இதோ பாரு ஜானு நாய்க்குட்டி. ஒழுங்காகச் சாப்பிடு. இல்லைன்னா பூதம் கிட்டப் பிடிச்சுக் கொடுத்திருவேன்" என்று சொல்லிக்கொண்டே சோறூட்ட ஆரம்பித்தார் அம்மா.

விட்டால் போதும் என்று அலறியடித்து ஓடியது பூதம்!

## உங்களுக்குத் தெரியுமா...?



- ✦ இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் நீர் நிலைகளை மோப்ப சக்தியால் ஒட்டகங்கள் கண்டுபிடித்துவிடும்.
- ✦ உலகில் 26 நாடுகளில் கடற்கரையே இல்லை.
- ✦ மிளகு என்றால் கறுப்பு நிறத்-தில்தான் நாம் கண்டிருப்போம். ஆனால் பச்சை, சிவப்பு, வெள்ளை நிறங்களிலும் உண்டு.
- ✦ ஆபிரிக்கக் கண்டத்தில் மட்டுமே வரிக் குதிரைகள் காணப்படுகின்றன.
- ✦ ஒரே தாவலில் அதிக தூரம் தாண்டும் மிருகம் கங்காருதான். அது 13 மீற்றர் தூரத்தை தாண்ட முடியும்.
- ✦ தேனீக்கு இரண்டு இரைப் பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாக வும் மற்றையது சமிபாட்டு உறுப்பா கவும் காணப்படுகின்றது.
- ✦ மண்புழுவில் ஆண், பெண் என்ற தனித் தன்மை கிடையாது. இரண்டு உறுப்புகளும் ஒரு மண்புழுவில் இருக்கும்.



## குரங்கு சில தகவல்கள்



- குரங்கு ஒரு பாலூட்டி இனமாகும்.
- 14 சென்ரி மீற்றர் தொடக்கம் ஒரு மீற்றர் வரையான (வால் தவிர்த்து) குரங்குகள் உள்ளன.
- பழங்கள், தானியங்கள், இலைகள், பூச்சிகள், முட்டைகளை உணவாக உட்கொள்கின்றன.
- குரங்கில் இருந்தே மனிதன் தோன்றினான் என பரிணாம வளர்ச்சி கொள்கையை முன்மொழிந்த டார்வின் கூறுகிறார்.
- குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உள்ளன. ஒன்று உடலையும் மற்றது வாலையும் செயற்பட வைக்கின்றன.
- 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகள் வசிக்கின்றன என நம்பப்படுகின்றது.
- 1949 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வி-2 விண்வெளி ஓடத்தில் செம்முகக் குரங்கு விண்வெளிக்குப் பயணமானது.
- இந்துக்கள் கடவுளாக வணங்கும் ஆஞ்சநேயர் குரங்கு இனத்தை சேர்ந்தவர். இதனால் இந்துக்கள் குரங்குக்கு முக்கிய இடம் வழங்குகின்றனர்.





# தியானம் எனும் துயர் நிவாரணி

நம்மவர்களுக்குத் தியானம் புதிய விடயமல்ல. தியானம் செய்வது மனதுக்கும் உடம்புக்கும் நல்லது் உடம்பு இறுக்கம் நீங்கிப் புத்துணர்வு பெறும் மனதில் அமைதி நிலவும் என்பதை எல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நம் முனிவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். இப்போதுதான் மேலைநாட்டு ஆய்வாளர்கள் மனதைக் குவித்து தியானம் செய்கிறவர்களுக்குப் புறப்புலன்களால் உணர முடியாத, பிரக்ஞை கடந்த மூளைச் செயல்பாடுகள் அதிக அளவில் புலப்படுகின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள். அதன் காரணமாக தியானம் செய்கிறவர்களால் தமது உடலை முழுப் பிரக்ஞையுடன் ஆட்படுத்த முடிகிறது.

1983ஆம் ஆண்டில் பெஞ்சமின் லைபட் என்ற நரம்பியல் விஞ்ஞானி, தனிநபர்கள் ஒரு முடிவெடுக்கும் போது அதில் எந்த அளவுக்கு முழுப் பிரக்ஞையுடன் செயல்படுகிறார்கள் என்பதை ஆய்வுசெய்தார். அவருடைய சோதனையின்போது தனிநபர்கள் ஒரு சுவிட்சின் முன்னால் அமரவைக்கப்பட்டார்கள். எப்போதெல்லாம் அதை அழுத்த வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போதெல்லாம் அழுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டது. அவ்வாறு அவர்கள் அதை அழுத்தும்போது அவர்களுடைய மூளையின் செயல்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. சுவிட்சை அழுத்து என்று மூளை ஆணையிடுவதற்கும், விரல்கள் அந்த ஆணையை நிறைவேற்றுவதற்குமிடையிலான கால இடைவெளி கணக்கிடப்பட்டது.

மூளை உத்தரவிட்டதற்கு 200 மில்லி விநாடிகள் கழித்தே விரல்கள் அந்த உத்தரவை நிறைவேற்றுகின்றன. ஆனால், மூளையில் உத்தரவு உருவாவதற்கு 150 மில்லி விநாடிகளுக்கு முன்பே அதற்கான தீர்மானம் உருவாகிவிடுகிறது. உடலின் உறுப்புகளை நாம் நினைக்கிற அளவுக்கு நம்மால் கட்டுப்படுத்தவோ இயக்கவோ முடியாது என்பதே இதன் பொருள். ஒவ்வொரு உறுப்பும் நரம்பும் தசைநாரும் ஓரளவுக்கு சுயேச்சையாகச் செயல்படும் அதிகாரம் பெற்றுள்ளன. தியானம் செய்வதால் மேற்சொன்ன மில்லி விநாடிகளின் எண்ணிக்கையில் ஏதாவது கூடவோ குறையவோ செய்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதே இந்த ஆய்வின் நோக்கம்.

அண்மையில் லைபட்டின் சோதனைகள் மேலும் திறன் மேம்பட்ட கருவிகளின் உதவியுடன் திரும்பச் செய்துபார்க்கப்பட்டன. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 11பேர் தியானப் பயிற்சி பெற்றவர்கள். 46 பேர் தியானம் செய்யும் பழக்கமில்லாதவர்கள். எல்லோரும் ஒரு கடிகாரத்தில் கண் வைத்தவாறு, விரும்பும் போதெல்லாம் ஒரு சுவிட்சை அழுத்தினார்கள். சோதனையின் முடிவில் தினமும் தியானம் செய்யும் வழக்கமுள்ள குழுவினர் மூளையில் ஆணை பிறந்ததற்கு 149 மில்லி வினாடிகளுக்குப் பிறகே விரல்களை இயக்கினார்கள். தியானப் பயிற்சியோ பழக்கமோ இல்லாதவர்களுக்கு அந்தக் கால இடைவெளி 68 மில்லி விநாடிகளாக இருந்தது.

தியானம் செய்பவர்கள் தமது அடி மனதுடன் அதிக அளவில் ஒத்திசைவுடன் இருக்கிறார்கள் என்பதை இச் சோதனைகள் காட்டுகின்றன. அவர்களுடைய ஒவ்வொரு செயலும், இயக்கமும் மூளையில் உருவாவதையும், அவை புலனுறுப்புகளுக்கு மாற்றப்படுவதையும் மற்றவர்களைவிட முன்னதாகவே அவர்கள் உணர்கிறார்கள்.

அனிச்சையும் பிரக்ஞையும்

இத்தகைய ஆய்வுகள், தியானம் செய்கிறவர்களின் அவயங்கள் நினைவு சம்பந்தப்படாத மூளைப் பகுதிகளுடனும் மேம்பட்ட இணைப்புகளைப் பெற்றிருப்பதாக நிஷரூபிக்கின்றன. அப்பகுதிகள் அனிச்சைச் செயல்களை ஆளுகிறவை. நடப்பது, உட்காருவது, தலையைத் தடவுவது போன்ற செயல்கள் அனிச்சையாகவே நிகழ்கின்றன. யாராவது, “இப்போ எதுக்குத் தலையைத் தடவினாய்?” என்று கேட்டால் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். நாம் பெரும்பாலும் அன்றாடத்தில் செய்யும் காரியங்களை விழிப்பின்றி அனிச்சையாகவே செய்கிறோம்.

தியானம் என்பது கடவுள் பக்தி சம்பந்தப்படாததாகவும் இருக்கலாம். ஆய்வாளர் குழுவிலிருந்தவர்களில் சிலர் கடவுளை நம்பாதவர்கள்தான். அவர்கள் தமது மனதுக்குப் பிடித்தமான ஒரு நபரை அல்லது பொருளைத் தமது மனக்கண்ணுக்கு முன் வரவழைத்துத் தியானம் செய்தார்கள். அவர்களுக்கும் உடலில் நல்ல விளைவுகள் தோன்றின.

முறையாகத் தியானம் செய்தவர்களி உடலில் வேதனைகளை உண்டாக்கு இன்டர்லியூகின் என்ற சுரப்பின் அளவு வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. அது உடலில் புற்றுநோய் தோன்ற வாய்ப்புள்ளதை காட்டும் உயிரியல் சுட்டி ஆகும்.

தியானம் செய்பவர்கள் அடிமனதுடன் ஒத்திசைவுடன் இருக்கிறார்கள்

தியானத்தைக் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் செய்யலாம்

தியானம் உடல் வேதனைகளை நோய் வாய்ப்புகளையும் குறைக்கிற

# சக மனிதரிடம் அன்பாயிருங்கள்

கடவுள் வழங்கிய திருச்சட்டங்களைக் கற்று, அவற்றைத் தொழுகைக் கூடங்களில் போதிப்பவர்களை ‘திருச்சட்ட வல்லுநர்’ என்று யூத மக்கள் அழைத்தனர். மக்களுக்குப் போதிக்கிறோம் என்ற கர்வத்துடன் வலம் வந்த இவர்களுக்கு, இயேசுவின் மீது பொறாமை இருந்தது. இயேசுவின் புகழ் வேகமாகப் பரவிக் கொண்டிருந்த நாட்களில் தொழுகைக் கூடங்களுக்கு வரவேண்டிய மக்கள், இயேசு போதிக்கும் இடங்களில் குவிந்தார்கள். இதனால் ஏட்டுச்சுரைக் காய்களாக இருந்த திருச்சட்ட வல்லுநர்கள், இயேசுவிடம் இடக்கு மடக்காகக் கேள்விகளைக் கேட்டு அவரைத் தோற்கடிக்க நினைத்தனர். உள்நோக்கத்துடன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இயேசு கதையுடன் கூறிய பதில்களால் அவர்கள் மனம் மாறி இயேசுவைப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

இயேசுவின் காலத்தில் யூதர்கள், மதத் தலைவர்கள், குருக்கள் ஆகியோரால் வெறுக்கப்பட்ட மக்களாக சமாரியர்கள் வாழ்ந்துவந்தனர். இயேசுவோ எல்லோரையும் போல் சமூகத்தின் ஒரு அங்கமாக இருந்த அவர்களை வெறுக்கவோ, ஒதுக்கவோ கூடாது என்பதைத் தன் வாழ்வின் வழியே எடுத்துக் காட்டினார். அனைவரும் கடவுளின் குழந்தைகளே என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இயேசுவை மடக்க நினைத்து அவரை நெருங்கி வந்த திருச்சட்ட வல்லுநர் ஒருவர் இயேசுவைப் பார்த்து “போதகரே, முடிவில்லாத வாழ்வைப் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? ” என்று கேட்டார். அதற்கு அவர், “திருச்சட்டத்தில் என்ன எழுதியிருக்கிறது, நீங்கள் என்ன வாசித்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அப்போது திருச்சட்ட வல்லுநர், “ ‘உங்கள் கடவுளாகிய பரலோகத் தந்தையின் மேல் உங்கள் முழு மனதோடு அன்பு காட்ட வேண்டும்’ என்றும், ‘உங்கள் மேல் நீங்கள் அன்பு காட்டுவது போல சக மனிதர்கள் மீதும் அன்பு காட்ட வேண்டும்’ என்றும் எழுதியிருக்கிறது” என்றார். உடன் இயேசு, “சரியாகச் சொன்னீர்கள் அப்படியே செய்து கொண்டிருங்கள் அப்போது உங்களுக்கு முடிவில்லாத வாழ்வு கிடைக்கும்” என்று சொன்னார்.

ஆனால் அந்தத் திருச்சட்ட வல்லுநர், தன்னை ஒரு நீதிமான் எனக் காட்டிக் கொள்வதற்காக, “நான் அன்பு காட்ட வேண்டிய அந்த சக மனிதர்கள் உண்மையில் யார்?” என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு இயேசு ஒரு கதையைக் கூறினார்.

“ஒருவன் எருசலேம் நகரத்திலிருந்து கீழ்நோக்கி எரிக்கோ நகரத்துக்குப் போய்க்கொண்டிருந்தான். அப்போது, திருடர்களின் கையில் மாட்டிக் கொண்டான். அவர்கள் அவனிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு, அவனை பலமாகத் தாக்கி, கிட்டத்தட்டச் சாகும் நிலையில் குற்றுயிராக விட்டுவிட்டுப் போனார்கள். அந்தச் சமயத்தில் ஆலய குரு ஒருவர் தற்செயலாக அந்த வழியில் வந்து கொண்டிருந்தார். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவனைப் பார்த்தபின், எதிர்ப்பக்கமாகப் போய்விட்டார். ஒரு லேவியர் அந்த வழியில் வந்தார். மதகுருவைப் போலவே அவரும் கண்டும் காணதவரைப்போல் நடந்து கொண்டார். ஆனால், அந்த வழியில் பயணம் செய்து கொண்டிருந்த சமாரியர் ஒருவர் அவனைப் பார்த்த போது மனம் உருகினார். அவன் பக்கத்தில் போய், அவனுடைய காயங்கள்மேல் எண்ணெய்யையும் திராட்சை ரச மதுவையும் ஊற்றி, அவற்றுக்குக் கட்டுப்போட்டார். பின்பு, அவனைத் தன்னுடைய கழுதையின் மேல் ஏற்றி, ஒரு சத்திரத்துக்குக் கூட்டிக் கொண்டு போய்க் கவனித்துக்கொண்டார்.



அடுத்த நாள் அங்கிருந்து புறப்படும்முன் இரண்டு தினாரியூ பணத்தை எடுத்து சத்திரக்காரரின் கையில் கொடுத்து, ‘இவனைக் கவனித்துக் கொள்ளுங்கள் இதற்குமேல் செலவானால் நான் திரும்பி வரும் போது உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்’ என்று சொன்னார். அப்படியென்றால், இந்த மூன்று பேரில், திருடர்களின் கையில் மாட்டிக் கொண்டவனிடம் உண்மையிலேயே அன்பு காட்டியவர் யாரென்று நினைக்கிறீர்கள்?” என்று இயேசு கதையின் முடிவில் கேட்டார். அதற்குத் திருச்சட்ட வல்லுநர், “அவனிடம் இரக்கத்தோடு நடந்து கொண்டவர்தான்”என்று சொன்னார். அப்போது இயேசு, “நீங்களும் போய் அதேபோல் நடந்துகொள்ளுங்கள்” என்று சொன்னார்.

# ES Printers



பனர் பிரிண்ட்
(Banner),
35/=

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.




அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

மக் பிரிண்ட்
(MUG)
350/=





Rubber stamp

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com



11 to 11 PIZZA
நண்பர்கள், உறவினர்கள் மற்றும்
குடும்பத்தினருடன் ஒன்றாக இருந்து
உண்டு மகிழ விசாலமான இருக்கைகளுடன்
நாகரிகமான சூழலில், வாய்க்கு ருசியான
பல்வேறுபட்ட உணவுவகைகளை உண்டு மகிழுங்கள்.!
Party Pack
Mini : 2,450/=
1 Large Pizza, 2 Fried Rice, 1 Kottu, 1 Noodles, 1 2L Mega (6-8 பேர் பகிரக் கூடியது)
Party Pack
Medium : 4,800/=
2 Large Pizza, 3 Fried Rice, 2 Kottu, 2 Noodles, 2 2L Mega (15-18 பேர் பகிரக் கூடியது)
Party Pack
Large : 9,400/=
4 Large Pizza,6 Fried Rice, 4 Kottu, 4 Noodles, 4 2L Mega, (30-35 பேர் பகிரக் கூடியது)
★ சிக்கன் அல்லது மரக்கறி வகைகள் மட்டுமே
Wi Fi
HALAL
✓ Jaffna Style Masala Pizza விசேடமாக எமக்கு பொருத்தமான சுவையில் தயாரிக்கப்படுகிறது.
✓ Italian / Chinese Choice Pizza வெளிநாட்டவர்களுக்குப் பொருத்தமான சுவையில் சுவையில் தயாரிக்கப்படுகிறது.
✓ Fresh Juice, Milkshake மற்றும் மென்பாணங்கள்
✓ Sea Food, Mutton உணவு வகைகள்
✓ திருமண, பிறந்தநாள் விசேட ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
021 221 6700
யாழ் நகரில் இருந்து 5 Km வரையான தூரங்களில் உள்ள இடங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.
11 TO ELEVEN
PiZZA
RESTURANT
128, Palaly Road (Next to Parameswara Junction), Jaffna.
Tel: 021 221 6700 / 0777 444 225



சிறுகதை

# புத்தன் பரம்பரை

- பத்மா சோமகாந்தன் -

கோவில்மணி 'டாண், டாண்' என்று ஓசை எழுப்பியது. சுபசிங்கா பல தடவைகள் தன் கண்களை இறுக இறுக மூடிப்பார்த்தான். அவனுடைய முரட்டு சுபாவத்தை அறிந்தாற்போலும், நித்திராதேவி அவனை அணுக அஞ்சினாள். சுபசிங்கா படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவனுக்கு ஒரே அலுப்பாயிருந்தது. எழுந்திருக்க முயன்றான். கால், கை, மூட்டுகள், யாவும் நோவுகண்டிருந்தது. அந்தக்கிராமத்திலேயே முரட்டு வீரத்தில் முதலிடம் வகிக்கும் சுபசிங்கா, இப்படியான நிலமை தனக்கு ஏற்படுமென்று எதிர்பார்க்க வில்லை. 'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்' - என்ற குறளின் உண்மையை அறிந்திருக்க அவன் என்ன குறள் கற்றவனா? எத்தனையோ, படித்துப் பட்டம் பெற்ற அறிஞர்கள் கூட அநியாயத்துக்கும் அகந்தைக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும்போது படிப்பு வாசனை தெரியாத சுபசிங்கா எம்மாத்திரம்? கொள்கை, தியாகம், நீதி, நேர்மை என்பவற்றை 'ஏதோ கறிச்சரக்காக்கும்' என எண்ணிக் கொண்டிருக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான் சுபசிங்கா.

படுக்கையில் கிடந்துழலும் சுபசிங்காவைப் பார்த்த அவன் மனைவி மெனிக்காவுக்குப் பரிதாப மாயிருந்தது. அவள் தன் கணவனை நோக்கி. 'அன்று தடுத்தேனே, கேட்டியா சிங்கா? என் சொல்லைக் காதிலும் விழுத்தாது விட்டாயே, அன்று உன் உதவியை நாடியவர்கள் இப்போ எங்கே?' என அரற்றினாள், அவள் வேதனை விம்மலாக வெளிக் கிளம்பியது. குடித்து விட்டு வைக் கப்பட்டிருந்த சாராயப் புட்டியின் அடியைத் துடைத்தெடுத்து வந்து சுபசிங்காவுக்கு நோக்கண்டிருந்த இடங்களில் தேய்த்து விட்டாள். அதிலே சிறிது சுகம் கண்டு சுபசிங்கா கண்ணயர்ந்தான்.

காடையர் தலைவன் சுபசிங்காவுக்கு அன்றொரு நாள் கிடைத்த வரவேற்பு! ஆஹா!! அன்றையதினம் அவன் உள்ளம் மகிழ்ச்சியில் கிளர்ச்சி கொண்டு கூத்தாடியது. ஆனால் இன்று ....?

மோட்டார்க்காரில் தொட்டுப் பார்க்கும் அனுபவம்கூட அற்றிருந்த சுபசிங்கபாவுக்கு மேத்தானந்தா காரில் ஏறிச்சவாரி செய்யும் முதல் அனுபவத்தைக் கொடுத்ததுடன் நிறுத்தினாரா? இல்லையே! சாராயப் புட்டிகள், கள்ளுமுட்டிகள், இறைச்சிவகை, பணம் இப்படிப் பட்ட எத்தனை வகையான பரிசுகள் - 'அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டுதான் அடித்திருக்கிறது' என்ற எண்ண அலைகளிலே மகிழ்வு ஊஞ்சலாடினான் சுபசிங்கா அன்று. ஒருநாள் மேத்தானந்தா சுபசிங்காவை அழைத்து, 'நாளை கொழும்பு காலித் துறைமுகத்தில் தமிழர்கள் கூட்டங் கூட்டமாக வந்திருப்பார்கள். அவர்கள் வரும் காரணம் ஒரே இன வெறிதான். சிங்களச் சகோதரர்களாகிய எங்களையெல்லாம் சூறையாடி, அடித்து நொருங்கி, எங்களை ஒரு கை பார்த்துவிட்டுப் போகிறார்கள். எமது அன்னை ஸ்ரீலங்காவே தமிழரிடம் அடிமையாகப் போகிறாள். நாட்டு நிர்வாகம் யாவும் அவர்கள் கையிலேயே ஆகிவிடும். எமது சுதந்திரமே பறிபோய்விடும். தமிழரை நாம் அடக்கி யொடுக்கி வைத்தால்தான் நாம் ஒருவாறு தலை யெடுக்க முடியும். பணம், நிலம், பட்டம், பதவியெல்லாமே தமிழருக்காகிவிடும்.

எமதுதாய் - சிங்கள அன்னை தனிமையில் கதறுவாள். இலங்கைத் தமிழருக்குப் பக்கபலமாக இந்தியாவில் உள்ள பலகோடி தமிழரும் முன்வந்துள்ளனர். சிங்கள மொழியையும் சிங்கள இனத்தையும் அழிப்பதே அவர்களுடைய நோக்கம். எனவே நாம் காரியத்தில் கவனமாக கண்விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். யூன்மாதம் 7ந் திகதி கொழும்பில் நீங்கள் நடந்து கொள்வதில்தான் எமது எதிர் காலமும் எமது அன்னை சிங்கள மாதின் சுபீட்சமும் தங்கியுள்ளது. 'சிங்களம் வாழ்க! தமிழ் வீழ்க!' என ஒரு குட்டி 'லெக்சரே' அடித்துவிட்டார்.

படித்துப்பட்டம் பெற்ற மேத்-தானந்தா தன் இனத்தைத் தமிழினம் ஒதுக்க முன்வந்துள்ளது எனக்கூறியது சுபசிங்காவுக்கு முழுதும் நியாயமாகவே பட்டது. இனவெறி மாத்திரமல்ல, குடிவெறியும் - தான் ஒருசெயல்வீரன் - மேத்தானந்தாகூட தன்னிடம் உதவி கோரி வருகிறாரே என்ற எண்ணவெறி, கிறுக்கு யாவும் சேர்ந்து சுபசிங்காவுக்கு உற்சாகமளித் தது. அவனது உற்சாக உணர்ச்சியின் உவப்பு நடனமிட்டது. 'சிங்களம் வாழ்க! தமிழ் வீழ்க! சிங்களம் வீழ்க! தமிழ் வாழ்க! என அவன் குரல் உச்சஸ்தாயியில் - தடுமாறி ஒலி செய்தது.

சுபசிங்கா தன் இனத்திற்காகவும் நாட்டுக்காவும் கடமை செய்யும் நாள் நெருங்கிட்டதென்பதை 'பீக்', 'பீக்' என்ற மேத்தானந்தாவுடைய காரின் குழற்சத்தம் அறிவுறுத்தியது. சில சிங்களவரின் செயல் கண்டு சீற்றங் கொள்ளும் 'புத்தன் இதயம்' கொண்ட சில சிங்கள மக்களைப்போல் சீறி உறுமியபடி அதன் பின்னே வந்து நின்றது 'வான்'.

சுபசிங்காவின் தலைமையில் அந்தக்கிராமத்து வெறியர்கள், குடிகாரர்கள் யாவரும் தம்மை ஏற்றச் செல்ல வந்த வாகனங்களுள் ஏறி அமர்ந்து கொண்டனர். 'காலும் வாளும் கொழும்பு நோக்கி 'விர்' எனப் பறந்தன. போகும்போது தனன்குத் தெரிந்த இழிவான பேசக்கூடாத வார்த்தைகளைச் சுபசிங்கா ஞாபகப் படுத்திக்கொள்ள மறக்கவில்லை.

காலி முகத்துறையிலே 'அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டைபோல' வாகனங்களினின்றும் வெளியேறினர் சுபசிங்காவும் அவனது சகாக்களும். சுபசிங்காவுக்கு சுதந்திர உணர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவனது கிராமத்திலே குடிப்பதும், குழறுவதும், ஆடுவதும், பாடுவதுமாக அவன் உள்ளம் கரை காணாத 'ஏனென்று கேட்பாரற்ற' காட்டுக் கழுதைபோலச் சுதந்திர உணர்ச்சியுடன் உலாவித்திரிந்தவன் சுபசிங்கா. அத்தகைய சுபசிங்கா தன் வாழ்க்கையில் என்றுமே காணாத அனுபவியாத சுதந்திரத்தை அன்று கண்டான், காலி முகக்கரையில், கோவில்களில் கொலு வைத்திருக்கும் கற்சிலைகளைப் போலத் தமிழர்கள் கூட்டங் கூட்டமாயிருப்பதைக் கண்டான்.


முதல் நாள் மேத்தானந்தா காண்பித்த போட்டோக்களுக்குரிய உடல்களைத் துருவித் துருவிப்பார்த்தான். ஒரே வெள்ளையுடையையும். வெள்ளையுள்ளத்தையுமன்றி வேறொதுமே அவனால் காண முடியவில்லை.

கல்லுப்பிள்ளையார் போலிருந்தவர் களை உதைத்தான். 'தமிழ் வாழ்க' எனக் கோஷமிட்டுத் கொண்டிருந்தவர்களைக் கற்கள் கொண்டு தாக்கினான். முதுகிலறைந்தான், நெஞ்சில் குதித்தான். மேற்சட்டைகளை இழுத்துக் கிழித்தான். திடீரென அவன் பொதுவுடமையாகி விட்டதையெண்ண அவனுக்குச் சிரிப்பும் வரத்தான் செய்தது. தன் விருப்பப்படி, மண்டியிட்டிருந்த மக்களுடைய சட்டைப் பையினுள் கையை விட்டான். ஒரு இரண்டு ஷரூபாய்தான். அப்படியே அந்த நபரருகேயிருந்தவருடைய சட்டைப் பையில் ஏதோ தெரிந்தது. ஆவலுடன் எடுத்தான். கண்ணுக்கணியும் கண்ணாடியைவைக்கும் பெட்டி அது. அவனது ஏமாற்றம் அவனுக்கே ஆத்திரம் தந்தது. அறைந்தான் அந்தக் தமிழனுடைய கன்னத்தில். அவன் வாயும் ஏதேதோவெல்லாம் அரற்றிக்கொண்டது.

கண்ணயர்ந்திருந்த சுபசிங்காவை இடுப்பில் ஏற்பட்ட வலி இவ்வுலகுக் கிழுத்தது. கருணையின் வடிவம் - அவனது தெய்வம் அவனுடைய கஷ்டத்தைப் பார்த்து கவலை கொண்டு ஆறுதல் கூறுவதுபோலத் தோன்றியது. சுபசிங்காவுக்கு ஐயோ! மற்றவர்களுக்கு அடிப்பதிலும் உதைப்பதிலுமே அமைதியும் ஆனந்தமும் கொண்ட சுபசிங்காவின் மேல் இரக்கம் கொள்ள இவ்வுலகில் ஒருவர் உண்டா? அப்படியானால்... அந்த உருவம் மேத்தானந்தா தானா? கண்களை நம்பமுடியாமல் கசக்கிவிட்டுத் திரும்பவும் விழித்து விழித்துப் பார்த்தான் சுபசிங்கா. மேத்தானந்தாவின் இன வெறியும், சுயநலமும் கலந்த, இரக்கம் செத்த, இருள் படர்ந்த இதயத்தின் முன் நேர்மையும் கருணையும் கட்டிப்புரள அன்பு ஒளிவீசும் அந்த அழகொழுகும் வதனக் காட்சி அவனை ஆகர்ஷித்தது. சுபசிங்கா தன் நினைவு உணர்ச்சியையே இழந்தான்.

அன்பென்ற சீமையிலே கருணை என்ற சாயம் தீட்டப்பெற்ற உடை அவனை அழைத்துக் கொண்டது போன்ற ஓர் உணர்ச்சி. இனம் தெரியாத ஒரு சக்தி அவனை எழுத்திருக்கச் செய்தது.

( 18 ஆம் பக்கம் பார்க்க)




# எதற்கும் ஒரு விலை உண்டு

நகரங்கள் மாசுபடுவதை யார்தான் விரும்புவார்கள்? லண்டன் நகரமும் இந்த விடயத்தில் வாகனச் சாரதிகளின் குரல்வளைகளை நெருக்க ஆரம்பித்துள்ளது. லண்டன் நகர பிதா அறிமுகப்படுத்தி உள்ள புதிய சட்டத்தின்படி, 2006க்கு முன்பு பதியப்பட்ட, பெற்றோல், டீசல் வாகனங்கள், இனி நகருக்குள் நுழைவதானால், பத்து பவுண்ட்ஸ் அதிகமாக அதாவது 21.50 பவுண்ட்ஸ் செலுத்தினால்தான், நகருக்குள் தமது கார்களைச் செலுத்த முடியும். தலைநகரின் சூழல் நாளுக்கு நாள் மோசமடைந்து, காற்று அசுத்தமாவதைத் தடுக்க, லண்டன் நகர பிதா கான் முன்வைக்கும் புதிய திட்டமே இது! மாதமொன்றுக்கு 34,000 வாகனச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கின்றன செய்திகள், நகரின் சுத்தம் பேணப்படுவது அவசியம் என்பதால், இந்த திட்டம் தவிர்க்க முடியாத ஒன்று என்கிறார்கள் அவதானிகள். வருடா வருடம் 9,000க்கு மேற்பட்ட லண்டன்வாசிகள், மிகமோசமான காற்றை சுவாசித்து, மரணம் "நேர காலத்தோடு" ஏற்பட்டு விடுகிறது என்று ஒரு குண்டைப் போடுகிறார் லண்டன் நகர பிதா! லண்டனில் வாழும் பிள்ளைகளின் நுரையீரல், முழுமையான வளர்ச்சியைக் காணாத நிலையில் இருப்பதை இவர் சுட்டிக் காட்டுகிறார். வளர்ந்தவர்கள் ஆஸ்த்மா, ஞாபக மறதி, இருதய அதிர்ச்சி போன்ற நோய்களின் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகிறார்கள் என்பதையும் இவர் இங்கே ஞாபகமூட்டத் தவறவில்லை.

இந்த நிலையில், சில கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இன்னும் பலகடுமையான விதிமுறைகள், நடைமுறையில் வர இருக்கின்றன என்று இவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த மாதம், அதாவது ஒக்ரோபர் 23 இலிருந்து, பத்து பவுண்ட்ஸ் மேலதிகமாகக் கட்டும் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. வாரா வாரம் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை, காலை 7.00 இலிருந்து மாலை 6.00மணி மட்டும், இந்த மேலதிகக் கட்டண விதி முறை அமுலில் இருக்கும். 2020 இல் நகரை மிகக் குறைந்த அளவு அசுத்தமான காற்று கொண்ட தலைநகராக மாற்ற, இன்னும் சில கெடுபிடிகள் வரப்போவது நிச்சயம் என்கிறார்கள் அவதானிகள்! எதற்கும் ஒரு விலை உண்டு என்பது சரிதான்.

"உன்னை நேசிக்க முதலில் கற்றுக் கொள். பின்பு பிறரை நேசிப்பதில் உனக்கு சிக்கல்கள் இருக்கப் போவதில்லை". 2007 இலிருந்து, நிர்வாணத்தை நேசிக்கும் அடிட்ரியா என்பவர். தன் உடம்பைப் பார்க்கும் கோலம் இதுதான் போலும். இந்த நபருக்கு நீண்ட காலமாகவே "நிர்வாணம்" என்பதில் அதீதமான ஈடுபாடு இருந்து வந்துள்ளது. வெளிநாடுகளில் இவரைப் போல் உலாவும் "நிர்வாணச்சாமிகள்" சிலருடனும் இவர் தொடர்பு கொண்டுள்ளார். இது சிறிய குழுவென்றாலும், நெருக்கமான ஜகார்த்தாவின் மலைப் பிராந்தியங்களில், மிக இரகசியமாக இவர்கள் சந்தித்து கொள்கிறார்கள். சந்தித்த அடுத்த கணமே ஆடைகளைக் களைந்துவிடுவோம் என்று உற்சாகமாக சொல்லும் இவர், நாள் முழுவதும் அரசியல் தொடக்கம் அடுப்படிச் சமாச்சாரங்கள் வரை அலசுவோம் என்கிறார். மிகக் கவனமாக எங்கள் சந்திப்புக்கான இடங்களை தெரிவு செய்ய வேண்டி இருக்கின்றது என்கிறார் இந்த மனிதர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தோனேசியாவில் ஏனைய தீவுகளுடன் ஒப்பிடும்போது, பாலி தீவில், இந்த நிர்வாணச் சாமிகளுக்கு



# பிறந்த மேனிப் பிரியர்கள்

உறவைக் கொண்ட குழு என்கிறார் இவர். பொது இடங்களில் நிர்வாணமாக நிற்பதை அடியோடு தடை செய்யும் இந்தோனேசிய தலைநகரான ஜகார்த்தாவில் ஆண்களும் பெண்களுமாக 15பேர் வரையில் கொண்ட குழு இருக்கிறது. தடை அமுலில் இருந்தாலும் வெவ்வேறு இடங்களில் இவர்கள் "நிர்வாணமாக" ஒன்று கூடுவதை வழக்கத்தில் கொண்டுள்ளார்கள். சுதந்திரம் அதிகம் என்று சொல்லபப்டுகிறது. என்றாலும் இந்தச் சுதந்திரம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளால்தான் அதிகம் அனுபவிக்க முடிகின்றது என்று அலுத்துக் கொள்கிறார் ஒருவர்! எல்லாம் துறந்த நிலை இவர்களுக்கு தேவைப்படுகிறது. ஆனால், காலம், இடம் அதற்கு இடமளிக்க தயாராக இல்லை

# சிங்கத்துக்கு இரையாக்க வரிசையில் காத்திருப்பு




பிரியமாக வளர்த்த குதிரை இறந்து விட்டால், அதை சிங்கங்களுக்கு உணவாகக் கொடுக்க விரும்பி, ஆறு மாதங்கள் வரை டென்மார்க்கில் காத்திருக்கிறார்களாம். ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் இந்தக் காத்திருப்பு? காரணம் இருக்கவே செய்கின்றது. இறந்த குதிரையை தனியார் நிறுவனத்திடம் கையளித்து, அதை மீள் சுழற்சி முறையில் இல்லாதொழிக்க, 584 டொலர் தொகை செலவிட்டாக வேண்டும். ஆனால் அதே குதிரையை, டென்மார்க்கின் தலைநகரில் உள்ள மிருகக்காட்சிசாலை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு, தன் சிங்கங்களுக்கு இரையாக கொடுத்து வருகின்றது. பணச் செலவு எதுவுமில்லை. அதுமாத்திரமல்ல தமக்கு பிரியமான குதிரை மீள் சுழற்சி முறையில், இன்னொன்றாக திரிந்து, வேறொருவர் கைக்கு போவதை பலர் விரும்பவில்லை. ஒரு குதிரையை இன்னொரு சிங்கம் உண்பது ஒரு சாதாரண நிகழ்வு. காட்டு வாழ்வின் உணவுச் சங்கிலியில் இது ஒரு அன்றாட நிகழ்வும் கூட! என்கிறார் இன்னொருவர்.

இப்பொழுது எல்லோருமே இதை விரும்ப ஆரம்பித்துள்ளதால், குதிரைகளோடு வருபவர்கள் தொகையும் அதிகரிக்க, காத்திருப்புக் காலம் நீளத் தொடங்கி இருக்கின்றது. அது ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாம் என்கிறார்கள் மிருகக் காட்சிசாலை நிர்வாகிகள். இங்குள்ள சிங்கம், புலி, கரடி ஒன்ற காட்டு மிருகங்களுக்கு, இந்தக் குதிரை இறைச்சி என்பது அவற்றின் உணவின் ஒரு பகுதியே. இதைவிட முயல், ஆடு, வரிக்குதிரை போன்றவற்றின் மாமிசத்தையும் கொடுத்து வருகிறோம் என்கிறார் ஓர் அதிகாரி.



# அரியாலை துப்பாக்கிச் சூடு எழுப்பும் கேள்விகள்

- நோக்கன் -



போர் ஓய்ந்துவிட்டதெனப் பேசிக் கொள்கிறார்கள் மக்கள். ஊடகங்களும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இருந்தும் முன்பைவிட தற்போதுதான் ஆயுத வன்முறை உக்கிரமடைந்து கொண்டிருக்கிறது எனப் புத்தி ஜீவிகள் நம்பத் தொடங்கியிருக்கின்றனர்.

கடிகாரத்தின் முட் கம்பிகளைப்போலத் தொடங்கிய இடத்தையே வந்தடைந்திருக்கிறது போர். எனவே இதைப் போர் நீர்த்துப்போய்விட்டதாக எண்ணுவதா? அன்றேல் இன்னொரு போராட்டத்திற்கான புதிய ஆரம்பமென்று சொல்லுவதா?

உண்மையில் போர் தனது வடிவத்தை மாற்றியிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். தற்போது தான் உரிமைகளை வென்றெடுக்கத் தேவையான பனிப்போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் ஆணிவேரின் அசைப்புக்கு முன்பு பக்க வேர் களையப்படுவதைப் போல எதிரியின் நடவடிக்கைகள் உசுப்பிவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நுணுக்கமான உணர்வு சார்ந்த விழுமியங்களைக் கொண்ட ஒரு சமூகம் கவரிமானைப் போன்றது. மானம் முக்கியம் என்று அதன் அங்கங்கள் கருதுவதுதான் எதிரியின் பலமும் அச் சமூகத்தின் பலவீனமாகவும் எண்ணலாம்.

ஒரு சமூகத்தை ஆரோக்கியம் அற்ற சமூகமாக மாற்றினாலே போதும், அவர்களின் தேசிய உணர்வை அழித்துவிடலாம் என்பது கடந்த காலத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்களுள் ஒன்று. உலக நாடுகளில் உள்ள மேலாதிக்க அரசுகள் இதையே தமது ஆயுதமாகக் கையாண்டு கொண்டிருக்கின்றன. நம்மவர்களும் தமிழர் விடயத்தில் அதையே பின்பற்றுகிறார்கள் என்று கூறுவதும்பொருத்தமானதே.

எனவே சமகாலத்தில் அவ்வப்போது தோன்றி மறையும் ஸ்திரமற்ற தன்மைகளையிட்டு நாம் நீண்ட கவனத்தை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். வன்முறைகளை சாதாரணமாக எண்ணிக் கடப்பதென்பது எம்மை இன்னும் பாதாளத்திற்குள் தள்ளிவிடும். போர் முடிவுற்றதன் பின்னர் நேற்று வரை நடைபெற்ற பல விடயங்கள் தொடர்பாக சமூகத்தின் அக்கறை விரும்பிகள் ஒரு ஆய்வொன்றை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இருந்தும் கடந்த வாரம் குருநகரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடும் - அதனால் ஏற்பட்ட மரணமும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திச் சென்றிருக்கிறது.

இதற்கு முன்பு கொக்குவிலில் நடத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீதான சூட்டுச் சம்பவத்தின் சந்தேக நபர்களாக பொலிஸார் அடையாளம் காணப்பட்டனர். எனவே துப்பாக்கி அரசுடையது. அடுத்து நீதிபதி இளஞ்செழியனின் மீதும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மீதும் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபர் அடையாளங் காணப்பட்டார். அவர் உபயோகித்த துப்பாக்கியும் அரசுடையது. ஆனால் குருநகர் துப்பாக்கிதாரி யார் என்பதுவும், அவருடைய துப்பாக்கி எங்கிருந்து வந்தது என்பதும், இதுவரை தெரியாத விடயமாக இருக்கிறது. எனவே இது புதிர் மட்டுமல்ல, அதன் பின்னணி பற்றிய பல சந்தேகங்களையும் விட்டுச் சென்றிருக்கிறது.

இது பற்றி சில யாழ். ஊடகங்களின் செய்திகள், இதன் பின்னணியாக பாதுகாப்பு பிரிவு ஒன்று இருக்கிறது என தென்னிலங்கை சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றன. இதைவிட வாய் வழிச் செய்தியாகப் பல விடயங்கள் வைரலாகிக் கொண்டிருக்கின்றன. போதைவஸ்து கடத்தலோடு சம்பந்தப்படுத்தி இச் சம்பவத்தை இணைத்துப் பேசுகிறார்கள். மண் கொள்ளையோடு பிணைத்துக் கதை சொல்லுகிறார்கள். தனிப்பட்ட விரோதம் இருப்பதாக சொல்கின்றனர். புலனாய்வினரோடு இணைந்து செயற்பட்டவரென்றும் அவர்களுக்குள் ஏற்பட்ட பிணக்கின் நி·ர்த்தம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆனாலும் சம்பவத்தின் மூலம் இன்னும் வெளிப்படவில்லை. பொலிஸ் குழுக்கள் விசாரணைக்காக அமர்த்தப்பட்டுள்ள நிலையில் விடயம் மௌனித்துப் போயிருக்கிறது. பொலிஸ்மா அதிபர் அண்மையில் வெளியிட்ட ஒரு கருத்துப்படி, வட பகுதி வாள் வெட்டுப் பீதியிலிருந்து வெளி வந்திருக்கிறதெனவும், வாள்வெட்டோடு சம்பந்தப்பட்டவர்கள் முற்றாகக் கைது செய்யப்பட்டு விட்டார்கள் என்றும் ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டிருந்தன.

அந்தச் செய்திகள் வெளியான பின்னர் - தற்போது வாள்வெட்டு மிகவும் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. அது பற்றி பொலிஸ்மா அதிபர் இன்றுவரை வாய் திறக்கவில்லை. இதுவே சந்தேகத்துக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகிறது.

முன்பு நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுக்கு அரச புலனாய்வுத்துறையினர் பக்க பலமாக இருந்தனர் என தமிழ் ஊடகங்களுடன் சில சிங்கள ஊடகங்களும் சில கருத்துத் தெரிவித்தன. அரசு அது பற்றி சிந்திக்கத் தொடங்கியது. அரச தரப்பு அதை மறுத்திருந்தாலும் பலருக்கும் அறிந்த விடயமாக அது வெளியாகியபோது அரசு செயற்படத் தொடங்கியது.


கோப்பாய் பொலிஸாருக்கு விழுந்த வாள் வெட்டுக்குப் பின்னரே பொலிஸ் தரப்பு ஓடி விழித்து விசேட அதிரடிப் படையை வரவழைத்துச் சந்தேக நபர்களை கைது செய்யும் செயற்பாட்டில் இறங்கியது. தமிழ் சமூகம் ஒரு பதற்ற நிலைக்குள் இருக்கிறது. அத்தகையதாக இருப்பது யாருககுத் தேவையாக இருக்கிறதோ? அவர்கள் பற்றிச் சமூகம் விழிப்படைய வேண்டிய தருணம் இது.

நல்லிணக்கத் தூதுவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அண்மையில் யாழ்ப்பாணம் வந்தபோது பல தரப்பினரையும் சந்தித்தார். அவர்களிடம் கருத்துக் கேட்டார். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய உள வள நலனைப் பேணுவதற்குரிய விசேட அம்சங்களுடன் கூடிய செயற்பாட்டை விரைவுபடுத்த வேண்டும் என்று கூறி ஒரு நம்பிக்கையை விட்டுச் சென்ற நிலையில் யாழில் வன்முறைகள் அதிகரித்திருக்கின்றன.

நடைபெற்றுள்ள அத்தனை விடயங்களிலும் தெளிவை நாடி நிற்கின்றனர் மக்கள். ஜனாதிபதி உட்படப் பலர் வன்முறை வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இருந்தும் இத்தகைய வன்முறை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது இருப்பது அல்லது அது பற்றிச் செய்தியொன்றையும் வெளியிடாது இருப்பதென்பது பல சந்கேகங்களுக்கு வித்திடலாம்.

முப்பது வருடங்களாக நடைபெற்ற ஒரு போரையே முடிவுக்குக் கொண்டுவந்தவர்கள் என்று உரிமை கொண்டாடிக் கொண்டு நிற்கின்ற அரசு தரப்பினர், யாழ். மண்ணில் நடைபெறுகின்ற குற்றச் சம்பவங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதுவும், அது சார்ந்த குற்றவாளிகளைச் கைது செய்யாமல் இருப்பதுவும் ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எத்தகைய விரோதமானாலும் சரி, எத்தகைய குற்றவாளியெனினும் சரி 'ஒருவர் சுட்டுக் கொல்லப்படுதல்"என்பதை நாம் அனுமதிக்க முடியாது. ஒரு மனிதனின் தவறுக்குக் கொலையே தண்டனையாகவும், முடிவாகவும் இருக்க முடியாது.



**ரீடேர்ஸ் டயஸ்ற் உருவான கதை என்ற தொடர் இத்துடன் நிறைவு பெறுகிறது. இதழியல் உலகத்தில் ஒரு புரட்சியைச் செய்தவர் டி விட் வாலஸ். அவருக்கு என்றென்றும் உறுதுணையாக இருந்தவர் அவரது மனைவி லிலா. இதழியல் உலகத்தையும், வாசகர்கள் இரசனையையும் பிறிதொரு கோணத்தில் பார்த்தவர்கள் அவர்கள். காலத்திற்கேற்ப படைப்புகளைத் தந்தவர்கள். இன்றும் தந்து கொண்டிருப்பவர்கள். அதனால் தான் ரீடேர்ஸ் டயஸ்ற் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கிறது**

**– ஆசிரியர்**



# ரீடெர்ஸ் டைஜெஸ்ற் சஞ்சிகை பற்றி...

**ஊரைச் சுற்றினால்...**

ஜோசுவா மைனர் அந்த உறையில் அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்க்க விரும்பினார். மின் ஏணியில் இறங்கி வந்து கொண்டிருந்த நேரத்தில் உறையை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். உள்ளே இருந்தது 10 இலட்சம் டொலருக்கான காசோலை. கூடவே ஒரு கடிதமும் இருந்தது.

அவுட்வேர்ட் பவுண்டேஷன் வளர்ச்சிக்காக அந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்லி இருந்தார், டி விட் வாலஸ். இப்படி வலது கை கொடுப்பதை இடது கைக்குத் தெரியாமல் அவர் அள்ளிக் கொடுத்தது ஏராளம்.

கலை வளர்ச்சிக்காகவும் டி விட் வாலஸ் தம்பதிகள் அளவில்லாமல் கொடுப்பார்கள் என்பது அமெரிக்காவில் மட்டுமல்லாமல் அகில உலகமும் அறிந்திருந்த விடயமாக இருந்தது. கலையின் மேல் ஈடுபாடு கொண்டவர் லிலா. கலை வளர்ச்சிக்கு உதவுவதற்கு என்றே தனி நிதி ஒன்றை ஏற்பாடு செய்தார் அவர். நியூயோர்க் பெருநகர அருங்காட்சியகம் மட்டும் இதிலிருந்து 5 கோடி டொலருக்கும் மேற்பட்ட தொகையை நன்கொடையாகப் பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் கலைப்படைப்புகளை உள்ளடக்கிய மாபெரும் அரங்கம் ஒன்று அந்த அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டது. 10,220 சதுர மீற்றர் பரப்புக் கொண்டதாக அது விளங்கியது. அந்த அரங்கத்திற்கு நன்கொடையாளரான லிலாவின் பெயரையே சூட்டி இருக்கிறார்கள்.

இயற்கையின் அழகும் கலையும், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்பது லிலாவின் கருத்து. அந்த நோக்கத்தை அருங்காட்சியகத்தில் நிறைவேற்றச் செய்தார். அருங்காட்சியகத்தின் மாடங்களில் தினமும் தொடர்ந்து புத்தம் புதிய மலர்க் கொத்துக்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்தார். அதற்கான செலவை அன்பளிப்பாக அளித்தார்.

பிரான்ஸில் உள்ள கிவேர்னி என்ற இடத்தில் புகழ்பெற்ற ஓவியரான கிளாட் மானெற்றின் கலைக்கூடம் இருக்கிறது. இதனைப் புதுப்பித்து நடத்துவதற்குத் தேவைப்பட்ட பெரும் தொகையையும் லிலா வழங்கினார். தாராள மனத்துடன் பல்வேறு நல்ல காரியங்களுக்கு வாரி வழங்கும் வள்ளல்களாக டி விட் வாலஸும், லிலாவும் திகழ்ந்தார்கள்.

**எளிமையான பண்பு**

எத்தனையோ சாதனைகளைச் செய்திருந்தாலும் டி விட் வாலஸ் எளிமையாகவே நடந்து கொள்வார். அவருக்கு இருந்த செல்வச் செழிப்பிற்கும் அவரது நடவடிக்கைகளுக்கும் தொடர்பே இருக்காது. அவர் நினைத்திருந்தால் எதனையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கலாம். அந்தளவுக்குச் செல்வாக்கு மிகுந்தவராக இருந்தார். ஆனால் தாம் ஒரு சாதாரண மனிதர் என்பதாகவே நடந்து கொண்டார். பாமரனாக இருந்தாலும் சொந்த முயற்சியால் ஒருவன் தன்னை எந்த அளவிற்கு உயர்த்திக்கொள்ள முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். எதையும் துருவி ஆராயவேண்டும் என்ற ஆவல் அவருக்கு இருந்தது. அந்த ஆவலை நிறைவேற்றிக்கொள்வதற்காகக் கடினமாக உழைப்பதற்கும் அவர் தயங்கியதில்லை. அவர் படித்து முடிக்க வேண்டிய புத்தகங்களும், பத்திரிகைகளும் மலை அளவிற்குக் குவிந்து கிடந்தன என்று சொன்னால் அது மிகையல்ல.

இத்தனையும் கண்ணால் பார்த்தாலே பெரும் மலைப்புத் தோன்றும். அவை எல்லாவற்றையும் ஒருமித்த மனத்துடன் படிக்க வேண்டும் என்றால் அதற்கு அசாத்திய திறமை வேண்டும். இந்தத் திறமை அவரிடம் இருந்தது. முடிவுகளை விரைவாகவும், திறமையாகவும் எடுப்பார். குவிந்து வரும் வேலைகளைத் திட்டமிட்டபடி முடிப்பார். குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லாம் தயாராகி விடும்படி பார்த்துக் கொள்வார்.

அத்தனை வேலைகளையும் குறைவின்றிச் செய்து முடிப்பதற்கும் அவருக்கு நேரம் இருக்கும். வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு மகிழ்சியாகப் பொழுதைக் கழிப்பதற்கும் அவருக்கு வழி தெரியும். டி விட் வாலஸ் மிகவும் கூச்ச உணர்வு கொண்டவர் என்று சொல்வார்கள். பெரிதும் வெட்கப்பட்டு ஒதுங்கியே இருக்க நினைப்பார். இருப்பினும் தமது எழுத்துப் பணிகளிலோ, சமூகத் தொண்டுகளிலோ இந்தக் குணத்தை குறுக்கிடாதவாறு பார்த்துக் கொள்வார். தாம் எழுதும் ஒவ்வொரு எழுத்திலும் மனித குல மேம்பாட்டிற்கு என்ன இருக்கிறது என்று பார்ப்பார். பத்திரிகைத் தர்மம் என்பதை எவரும் சொல்லாமலே அவர் கடைப்பிடித்து வந்தார். எழுத்தில் நேர்மையைப் பின்பற்றினார். உண்மையை எழுதினார். அவருடைய உள்ளுணர்வு அவருக்கு அடிக்கடி நல்ல பல யோசனைகளை வழங்கி வந்தது.

தமது குட்டிப் பத்திரிகையைத் தொடங்குவதற்கு முன்னர் டி விட் வாலஸ் எந்தவிதக் கணக்கையும் போடவில்லை. மக்கள் எதை விரும்புகிறார்கள்? என்று ஆய்வு நடத்தவில்லை. தனக்கு எது எல்லாம் பிடித்திருக்கிறது என்பதைத்தான் ஆராய்ந்தார். அதுவே பெரும்பாலானவர்களுக்குப் பிடித்திருந்ததைக் கண்டு கொண்டார். வெற்றி பெற்றார். மனிதனின் நம்பிக்கையை எல்லைகளைத் தாண்டி எடுத்துச் சொல்லக்கூடிய எதையும் எழுத்தில் கொண்டு வந்துவிடவேண்டும் என்பது அவரது அவா. பிரச்சினைகளுக்குத் தீர்வுதேவை. அதை யார் சொன்னாலும் சரி என்ற கருத்தைக் கொண்டவர். வாசகர்களின் கருத்துக்கு அதிக மதிப்பளிப்பார். நினைவில் கொள்ள வேண்டியது, மேற்கோள் காட்ட ஏற்றது, பயன்படுத்தக்கூடியது என்பவைதான் அவரது எண்ணத்தை எப்போதும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சொற்களாக இருந்தன.

**உழைப்பிற்கு உயர்வு உண்டா?**

1973 ஆம் ஆண்டில் தாங்கள் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்கள் டி விட் வாலஸும், லிலாவும் பதிப்புப் பணிகளைத் தக்கவர்களிடம் ஒப்படைத்தார்கள். இருப்பினும் ஒரேயடியாக விலகி இருக்கவில்லை. தலைமை அலுவலகத்தில் அடிக்கடி டி விட் வாலஸைப் பார்க்க முடிந்தது. அவர் தன்னுடைய தனி அறையில் அமர்ந்து பணிகளைக் கவனிப்பதைக் குறைத்துக் கொண்டார். ஹை வின்ட் மாளிகையில் அவர் இருப்பது குறைவாக இருந்தது. வயது முதிர்ந்த நிலையிலும் கூட உற்சாகமாகவே செயற்பட்டு வந்தார். காட்டாற்று வெள்ளத்தில் மிதவைப் படகுகளில் கடந்து செல்லும் வீர விளையாட்டில் அவர் கலந்து கொண்டபோது அவருக்கு எண்பத்தெட்டு வயது என்று யாராவது சொன்னால் நம்ப முடியுமா? எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கண்டிப்பாக இருக்கும் என்று நம்பியவர் அவர். வயது ஆக ஆக அவருக்குக் கண்பார்வை மங்கலாகி வந்தது. கிட்டப் பார்வை குன்றிய போதும் தூரப் பார்வை நன்றாகவே இருந்தது. பத்திரிகைப் பணியில் உதவியவர்களுக்கு அவ்வப்போது பயனுள்ள குறிப்புகளை எழுதி அனுப்புவது டி விட் வாலஸின் வழக்கம். கிட்டப் பார்வைக் கோளாறு காரணமாக அவற்றைக் கையால் எழுதி அனுப்ப முடியவில்லை என்று ஒரு நேரம் குறைபட்டுக் கொண்டிருக்கிறார் டி விட் வாலஸ். இருந்த போதிலும் குறிப்புகளைத் தட்டச்சு செய்து அனுப்புவதைத் தொடர்ந்தார். தனது இறுதிக்காலம் வரை வாசகர்களை உயர்த்துவதற்கு என்ன செய்யலாம் என்பதே அவரது சிந்தனையாக இருந்தது.

இடைவிடாது உழைத்த டி விட் வாலஸ் தனது தொண்ணூற்றி ஓராவது வயதில் 1981 மார்ச் 30 அன்று காலமானார். அவர் மறைந்த பிறகு லிலாவும் அதிக காலம் உயிர்வாழவில்லை. மூன்று ஆண்டு காலம் கழித்து அவரும் இறந்து விட்டார். மறைந்தது அவர்கள் உடல்கள் மட்டுமே. என்றும் இறவாப் புகழுடன் அவர்கள் நிலைத்து நிற்கிறார்கள் . ஏனெனில் எந்தவொரு மனிதனும் தனது முன்னேற்றத்திற்கான தேடலுடன்தான் இருக்கிறான். அந்தத் தேடலில் அவனுக்கு உதவும் எவரையும் அவன் மறக்கமாட்டான். இதனால்தான் டி விட் வாலஸும், லிலாவும் என்றென்றும் வாழ்கிறார்கள்.

**(முற்றும்)**

நன்றி : ப. லெனின்
சிக்ஸ்த் சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்



## புத்தன் பரம்பரை... (14ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடலில் நோவே இல்லை. உள்ளத்தில் ஒரு சிறு நோவைத் தவிர, ஓடினான். அவன் குடிசைக்கருகே சிற்றாறு ஒன்று அமைதியாக அழகு நடை பயின்று கொண்டிருந்தது. ஆற்றின் கரையிலே விழுந்து அன்னையிடம் மன்னிப்புக்காக மன்றாடினான். குளிர்ந்த உள்ளம் படைத்த நீரன்னை அவனை ஏற்று இறுகத்தழுவினாள். அவள் அனணைப்பிலே இன்பங்கண்ட குளிர்மையில் மகிழ்வு கண்ட சுபசிங்கா முற்றிலும் புதியவனாக ஆற்றினின்றும் வெளியேறினான். அவன் உடலிலிருந்து தண்ணீர் 'சொட், சொட்'டென ஒழுகிக்கொண்டேயிருந்தது. மொட்டாக, இருண்டு சுயநலத்தால் மூடப்பட்டிருந்த சுபசிங்காவின் இதயம் விரிந்து விட்டதென்பதை அவன் கரங்களிலிருந்த விரிந்த நிர்மலமான தாமரை மலர்கள் வலியுறுத்தின. அவனுடைய உள்ளம் மாத்திரமல்ல, உடலும்கூட எதையோ தேடி ஓடிக்கொண்டேயிருந்தது.

பாழடைந்த பழசாப்போன கற்களின் மத்தியிலே புத்தருடைய சிலை ஒரு பக்கம் சாய்ந்து கிடந்தது. அதை எடுத்து நேராக, சரியாக வைத்தான் சுபசிங்கா. அந்தச் சிலையை தன் ஈரக்கரங்களால் துடைத்துச் சுத்தப்படுத்தினான். அந்தச் சிலைக்கருகே ஒரு அரசமரம், பல கிளைகள் பட்டுப் போய்விட்டாலும், 'புத்தம்' என்றுமே பட்டு மறைந்து விடக்கூடியதல்ல. ஒரு சுபசிங்காவினுடைய உள்ளத்திலாவது தளிர் விடவே செய்யும் என்று அறிவுறுத்துவதுபோல தளிர்விடும் சிறிய கிளையொன்று அந்தக் அரசமரத்துக்கு அமைதியை அளித்தது. சுபசிங்காவுக்கென தேநீர் கொண்டு வந்தாள் மெனிக்கா. படுக்கையிலே சுபசிங்கா இல்லாதிருந்தது, அவளுக்குப் பயத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது அங்குமிங்குமாகத் தேடினாள். சத்தம்வரும் திசையை நோக்கி ஓடினாள்.

அங்கே!

முளந்தாளில் மண்டியிட்டபடி சிலையின் முனனே உட்கார்ந்திருந்தான் சுபசிங்கா. அவன் கண்களிரண்டும் மகாவலிகங்கையின் கடமையில் ஈடுபட்டிருந்தன. அவன் உள்ளத்தை அன்பும் கருணையும் இறுக அணைத்துக் கொண்டன. 'விஷயம் தெரியாது தவறுதலாக பிழைவிட்டது உண்மை. மன்னிக்க வேண்டும்' என பல முறை அவனுடைய இதயம் ஓலமிட்டலறியது.

'புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி'

என அவன் வாய் தோத்தரிக்கத் தொடங்கியது.

புத்தனுடைய அன்புப் பிணைப்பிலே ஆனந்தமாக நீந்திக் கொண்டிருக்கும் சுபசிங்காவைக் கண்டதும் மெனிக்காவின் உள்ளம் ஆனந்தத்தால் கும்மாளமிட்டது. அவளும் அவன் அருகே அமர்ந்தபடியே.

'புத்தம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி'

என தன்மை மறந்து உச்சரிக்கத் தொடங்கினாள்.

பிழையான பாதையால் வழிநடத்தப்பட்டுவந்து அறியாது தவறு செய்த அந்த இரு உள்ளங்களும்கூட தாம் புத்தனுடைய பரம்பரை தானா என எண்ண நாணிக் கொண்டன.

## யாருக்கு நீதி...? (03ஆம் பக்கத் தொடர்ச்சி)



க. சச்சிதானந்தன் – மறவன்புலவு – தலைவர் –சிவசேனை

தமிழர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் வாழ்கின்ற வேறு மதங்களை கொண்டவர்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே இந்த உயிப் பலி வழிபாட்டை நடத்தி வந்துள்ளனர். மாறாக சமண கோயில் களில்தான் இந்த உயிர் பலிகளுக்கு இடமில்லை. இப்படியான உயிர்ப் பலி தொடர்பான முயற்சி தேவையில்லையென்றுதான் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மகாவீரர் தொடக்கம் புத்தர் காலத்திலும் இந்த உயிர்ப்பலி கொடுத்தல் தீமையென போதித்து வந்துள்ளனர். இது பொன்ற கொலைகளை வழிபாட்டு இடங்களில் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பாரத கண்டம் முழுவதும் மகாவீரர் மற்றும் புத்த கொள்ளைகள் போதிக்கப்பட்டன. ஒரு காலத்தில் தமிழர்கள் இலங்கையில் உயிர்ப்பலி கொடுப்பதில்லை அதனைச் சைவமும் ஏற்றுக் கொள்ளவில்லை. முருகன், சிவன், பிள்ளையார் போன்ற கோயில்களில் இவ்வாறான உயிர்பலிகள் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் கிராம தேவதைகளின் வழிபாட்டு முறைகளிலில்தான் இவ்வாறான உயிர்ப்பலிகள் கொடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில் அந்தாமர், முனிஸ்வரர், வைரவர், வீரபத்திரர், முத்துமாரி அம்மன், நாகதப்பிரான் மற்றும் காளி கோயில்களில்தான் உயிர்ப்பலிகள் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. இந்த உயிர்ப்பலிகளை நிற்பாட்டக்கோரி தமிழ்நாடு உற்பட 20 மாநிலங்களில் உயிர்ப்பலிக்கு எதிராக சட்டம் வந்து விட்டது. இலங்கையில் உயிர்ப்பலிக்கு எதிரான தடைச்சட்டத்தை இராஜதுரை அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்தார். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. நாங்கள் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் கவுணாவத்தை உயிர்பலியை நிறுத்தக்கோரி உண்ணாவிரதம் இருந்தோம். மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குப் போட்டோம். பிரதேச சபைகளின் அனுமதியுடன் இவ்வாறான உயிர்பலிகளை மட்டுப்படுத்தப்பட்டு மேற்கொள்ள முடியும்மென உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதற்கு கொலைக்கள விதிகளுடன் சுகாதார பரிசோதகர் உறுதிப்படுத்தலுடன் இந்த உயிர்ப்பலி நடைபெற்றது. இதனையடுத்து நாம் இந்து கலாசார அமைச்சரிடம் உயிர்ப்பலியை தடை செய்யக்கோரி மனுக் கொடுத்தொம் அதுவும் வெற்றியளிக்கவில்லை. இதனையடுத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்க முடியாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது 2500 ஆண்டுகள் மனித சமூக வரலாற்றில் உயிர்ப்பலி தடைச்சட்டம் நாகரிகத்தின் வளர்ச்சியின் முன்னேற்றமாகும். இது மனிதர்களைத் தேவர்களாக்கும் நிலையாகும். இனி நாம் தலை நிமிர்ந்து தமிழர்கள் என்று சொல்லலாம்.

## பரிமளத்தை தேடி... (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு போனார் ஆறுமுகம். நாய்களைக் கண்டதால, ஆரோ வேட்டைக்குப் போகிறார்களாக்கும் எண்டு நினைச்சிருப்பார் அவர்.

இப்ப நாங்கள் சிவானந்தபுரத்துக்கு வந்து விட்டோம். அதுவரையில ஆடுகளின் தடமும் அந்தக் காலடியும் ஒரு போக்கிலே இருந்தது. இப்ப குறுக்கு றோட்டு வந்து மறிச்சிது. இது தார் றோட்டு. தார் றோட்டில் காலடியைப் பாக்கேலாது. இனிப் போன வழியைக் கண்டு பிடிக்கிறது கஸ்ரம்.

ஆனால், நிச்சயமாக ஆரோ பரிமளத்தைப் பிடிச்சுக் கொண்டு போயிருக்கிறாங்கள். சாய்ச்சுக் கொண்டு போன மாதிரித் தெரியேல்ல. கழுத்துக் கயிற்றைப் போட்டு இழுத்துக் கொண்டு போன மாதிரி வழியில அவள் மறுகி மறுகிப்போன தடங்கள் புழுதியில படிஞ்சிருந்தது.

தெருவைக் கடந்தால், மறுபக்கமாக உள்ள தென்னந்தோப்பு. அதுக்கு முன்னால், எங்களை தெருவோரத்தில நிண்ட நாவல் மரத்துக்குக் கீழ நிக்கச் சொன்னார். நிண்டம். சின்னண்ணா மெல்ல வேலியோரமாகப் போய் ஒண்டுக்கு அடிச்சான். சிங்கனும் காலைத் தூக்கித் தன்ரை பங்குக்குக் காரியம் பார்த்தான். பெரியய்யா தென்னந்தோப்புக்குள்ள நுழைஞ்சு, தென்னைகளுக்கு இடையே போய்க் கொண்டிருந்தார். வீமனும் சிங்கனும் பெரியய்யாவோட போனான்கள். அவங்களைத் திருப்பிக் கூப்பிடச் சொனனார் பெரியய்யா. சின்னண்ணா கூப்பிட்டான். ரண்டு பேரும் திரும்பி வந்து எங்களோட நிண்டான்கள். அது அவங்கள் பழகின நல்ல பழக்கம். நான் சிங்கனைத் தடவிக்கொண்டிருந்தேன்.

இருளுக்குள் இருளாக மறைந்து போன பெரியய்யாவுக்காக நாங்கள் அங்கே ஒரு மணித்தியாலயத்துக்கு மேல நிண்டிருப்பம். எனக்குக் கால் கடுத்தது. பசி வேறு வயிற்றில் தீயை மூட்டியது. கொட்டா கொட்டாவியாக விட்டுத் தள்ளினேன். அதைவிடத் தூக்கம் வேறு வந்தது. இனி இவ்வளவு தூரத்துக்குத் திரும்பி நடந்து போறது எண்டால்.... அதை நினைக்க இங்கயே படுத்துத் தூங்கீடலாம் போல இருந்தது.

சின்னண்ணா எப்பவும் போல வானத்தில இருக்கிற வெள்ளிகளை பார்த்துக் கொண்டிருந்தான். சரியாக ஒரு மணித்தியாலயத்துக்குக் கிட்ட இருக்கும். பெரியய்யா, வந்தார். "வாங்கோ போவம்" எண்டார். "என்ன, பரிமளத்தைக் கண்டீங்களா?" எண்டு கேட்க மனம் உந்தியது. எண்டாலும் அதைக் கேட்கேல்ல நான். 'பாப்பம், இனி என்ன செய்யப்போறார், எங்க போகப்போறார்' எண்டு நினைச்சுக் கொண்டு நடந்தன்.

கால்கள் சோர்ந்து நடை குழம்பியது. "பரிமளத்தைக் கண்டுபிடிக்காமலா திரும்பிப் போறம்? அம்மாவால இதைத் தாங்க முடியுமா? எவ்வளவு வாஞ்சையோட அதை வளர்த்தா? அதின்ரை ஒவ்வொரு ஈத்தையும் அம்மா வலு பக்குவமாகப் பார்ப்பாவே... போனதடவை அது ஈண்ட ரண்டு கிடாய்களையும் வித்துத்தானே தீபாவளிக்கு எல்லாருக்கும் உடுப்பு வாங்கினது. அம்மா நகை செய்தாலென்ன, எங்களுக்குப் புது உடுப்பு வாங்கினாலென்ன, எல்லாம் பரிமளித்தினாலதான். அது பெருக்கிய பட்டியே இப்ப நிற்கிற 47 உருப்படிகளும் இடையில வித்த கணக்கு வேற.

பரிமளத்தைப் பற்றிய துக்கம் தொண்டையை அடைச்சிது. இவ்வளவு தூரத்துக்கு வந்திட்டு, வெறுங்கையோடயா போறது? எண்டு நினைக்க நினைக்க மனசில பெரிய பாரம் ஏறிக்கொண்டேயிருந்தது. அதுக்கு மேல என்னால நடக்கவே முடியேல்ல. ஆனால், பெரியயயாவிடம் எதையும் கேட்க முடியாது. அவராகச் சொன்னால்தான் உண்டு.

வீடு திரும்பி வரும்வரை ஆருமே எதுவும் கதைக்கவில்லை. விளக்கு முன்னால அம்மா சுவரோட சாய்ந்த படி இருந்தா. அக்கா, பெரியம்மா, சித்தி எல்லாரும் கூடியிருந்திச்சினம். வேளையோட தூங்குகிற தம்பி கூட இன்னும் படுக்காமல் சித்தியின் மடியில் தலைவைச்சுக் கொண்டிருந்தான். எல்லாருடைய காத்திருப்பும் பரிமளத்துக்காகத்தான்.

நாங்கள் வந்த அசுமாத்தத்தை அறிந்த அம்மா எழுந்தோடி முற்றத்துக்கு வந்தா. பரிமளத்தைக் கொண்டு வராமல், நாங்கள் மட்டும் தனியாக வந்ததைப் பார்த்த அம்மாவுக்கு அழுகை வெடிச்சிது. என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழத் தொடங்கீட்டா...

எங்களைப்போய்ச் சித்தப்பாவைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னார் பெரியய்யா. நாங்கள் ஓடிப்போய்ச் சித்தப்பாவைக் கூட்டிக் கொண்டு வந்தம். "வா, போய் வட்ட விதானையைக் கூட்டிக் கொண்டு, கூழைத் தம்பையா வீட்டுக்குப் போகோணும்" எண்டு சித்தப்பாவிட்டச் சொன்னார். அவை ரண்டு பேருமாக வெளிக்கிட்டுப் போய்ச்சினம்.

"எங்கயெல்லாம் போனீங்கள்? என்ன நடந்துது.... ஆரைச் சந்திச்சீங்கள்..." எண்டெல்லாம் அம்மா கேட்டா. நாங்கள் என்னத்தச் சொல்லிறது? "சிவானந்தபுரம் தென்னந்தோப்பு வரை போனம். அங்க எங்கள றோட்டில விட்டிட்டு, பெரியய்யாதான் உள்ளபோய்ப் பார்த்தார்... அவ்வளவுதான்" எண்டம். அம்மாவின் கண்கள் உடைந்தன. அதுக்கு மேல எதையுமே கதைக்காமல் நான் விறாந்தையில படுத்துத் தூங்கீட்டன்.

நடுச்சாமம் பன்னிரண்டு, ஒரு மணியிருக்கலாம். ஆரவாரச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பினன். பார்த்தால் அம்மா முற்றத்தில நடந்து போய்க்கொண்டிருந்தா. பின்னால பெரியம்மா... சித்தி, சித்தப்பா... சின்னண்ணா...

பரிமளத்தின் கழுத்து மணியோசை கேட்டுது. அம்மா ஓடிப்போனா. அம்மாவைக் கண்டதும் பரிமளம் கத்தினாள். அப்பிடியே பட்டிக்குள்ளயிருந்து ஏராளம் குரல்கள் கேட்டன. அம்மா பரிமளைத்தைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினதை பெரியய்யாவின் அஞ்சு பற்றி ரோச் லைற் காட்டியது.

"கொஞ்சம் முந்தீட்டம். இல்லையெண்டால், விடியக் காலமை கந்தையாவின்ரை பெட்டுக்குப் பரிமளத்தை ஏத்தியிருப்பான் கூழையன் (தம்பிஜயா)" எண்டு பெரியய்யா சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.



# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 20

— உமா சந்தோஷ் —

'அத்தான் ஒளிக்காமல் சொல்லுங்கோ. என்ன சாப்பிட்டனியள்" டொக்டர் மச்சாள் அன்பாகக் கேட்டாள். நடா பணிஸும், கோப்பியும் குடித்ததை ஒப்புக் கொண்டார். அன்பாக டொக்டர் மச்சாள் திட்டினாள். நடாவைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் வைத்திருந்தால் ஏதாவது இடக்குமுடக்காச் செய்வார் என்று தெரிந்ததும் டொக்டர் மச்சாள் வாட் டொக்டரிடம் பேசினார். தான் பொறுப்பெடுப்பதாகச் சொல்லி டிஸ்சார்ஜ் பண்ண ஏற்பாடு செய்தார்.

நடா வீட்டை வந்திட்டார். டொக்டர் மச்சாளின் கண்காணிப்பில் இருந்தார். 'இனி அந்த விசர் வேலை எல்லாம் செய்யாதையுங்கோ அத்தான். வயது போட்டு தெண்டில்லாமல் கூத்தாட நிக்கிறியள்" டொக்டர் மச்சாள் செல்லமாய்ப் பேசுவதைக் கண்கொட்டாமல் பாத்துக் கொண்டிருந்தார் நடா.

மறுநாள் காலை உணவோடு மேசையிலிருந்தார். ரெலிபோன் மணி அடிக்கத் தொடங்கியது. நடாவின் மனைவியே போனை எடுத்தார். அடுத்த பக்கத்திலிருந்து மார்க் பேசினார். இரண்டு தினங்களுக்கு முன்னர் நடக்கவிருந்த டின்னர் நடக்கவில்லை என்றும் அன்று மாலைதான் நடக்கப் போவதாகவும் சொல்லி அழைப்பு விடுத்தார்.

'நடா இன்றைக்குத் தான் ஹொஸ்பிற்றலில் இருந்து வந்திருக்கிறார். சோ.. எங்களாலை வரேலாது மார்க்...சொறி. இன்னொரு நாளைக்குப் பார்க்கலாம்.. பாய்' என்று தொலைபேசியை வைத்தார் நடா மனைவி. நடாவின் மனதில் கடுகடுப்பு மாறி சந்தோஷம் பிறந்தது. மெல்ல எழுந்து போய் கன்னத்தில் கிள்ளிவிட்டு 'என்ரை கள்ளி' என்று சொன்னதும் சட்டென நடா மனைவி நடாவிடம் சரண்டர் ஆனா.

நாளைக்கு வெள்ளிக் கிழமை. நல்லூருக்குப் போறதாப் பிளான் பண்ணியிருக்கிறன். உங்களுக்குச் சுகம் வரவேணுமெண்டு நேர்ந்தனான் என்றார் நடா மனைவி. 'சோழியன் குடும்பி சும்மா ஆடாது' என்று தனது மனதுக்குள் எண்ணிக் கொண்டார் நடா. மறுநாள் காலை. ஏழு மணி இருக்கும். எல்லோரும் ரெடி ஆகி காருக்குள் ஏறிவிட்டனர். நடாவை மட்டும் காணவில்லை. 'அத்தான் இப்பிடித்தான். ஒரு இழுவல் கேஸ்' என்று டொக்டர் மச்சாள் திட்டினார். 'இப்ப தானே சுகமில்லாமல் இருந்து தேறி இருக்கிறார். ஆவர் ஆறுதலா வரட்டும். அவரைப் பேசாதேயும்' என நடாவின் மனைவி சொல்ல.. 'என்ன காத்து மாறி அடிக்கிது' என்று நக்கலடித்தார் டொக்டர் மச்சாள். நடாவின் வருத்தம் என்ன வென்று அவளுக்குத் தானே புரியும்?

நல்லூரில் வேண்டுதல் அமோகமாக இருந்தது. நடா கண்களை மூடி ஓரிடத்தில் இருந்தார். அவர் மனைவி ஓடி.. ஓடி எல்லா வேண்டுதலையும் நிறைவேற்றினார். எல்லோரும் கோவிலிலிருந்து புறப்படத் தயாரானதும் நடா டொக்டர் மச்சாளின் காதில் எதையோ குசு குசுத்தார்.

நடாவின் விருப்பப்படி கார் றியோ ஐஸ்கிறீமை அண்டி நிறுத்தினாள் டொக்டர் மச்சாள். 'என்ன, இங்கை? ஆச்சரியமாப் பார்த்தாள் நடா மனைவி. 'உமக்கு அத்தான் பார்ட்டி வைக்கப் போறாராம்' என்றார் டொக்டர் மச்சாள். 'நல்ல கதை.. என்ரை சாட்டிலை அவரும் ஐஸ்கிறீம் சாப்பிடுகிற ஐடியா, என்ன? எனக்கு விளங்கும்.' என்றார் நடா மனைவி.

நடா ஒரு நோமலை ருசிக்க மற்றவர்கள் எல்லோரும் ஸ்பெஷலை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர். நடா மட்டும் எழுந்து போய் வேலைக்காரிக்கென ஒரு பார்சல் ஓடர் பண்ணினார். இதைவிட வேலைக்காரிக்கு லஞ்சம் கொடுக்க வேறு வழியில்லை என்று நடாவுக்குத் தெரியும். அவர்கள் புறப்பட ஆயத்தமான வேளை, 'கோயிலுக்கு வந்தனாங்கள்' என்று சொல்லிக் கொண்டு நடாவின் மச்சாள் கணவனுடன் றியோவுக்குள் வந்தார். அவர்களைக் கண்டதும் நடாவின் சந்தோஷம் அதிகரித்தது. அவர்களை அழைத்து வந்தார். அவர்களுக்கு விருப்பமானவற்றை ஓடர் செய்தார். றியோவே கலகலத்தது. நடா முன்பொருகாலும் இல்லாதவாறு வலு சந்தோஷத்துடன் காணப்பட்டார்.

இன்னும் சில தினங்களில் கொழும்பு புறப்படத் தயாராகும் விடயத்தை அப்போதுதான் போட்டுடைத்தார் நடா. நடா மச்சாளின் கவலை அவள் முகத்தில் தெரிந்தது. அவளுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் கவலையாக இருந்தது.

'அப்ப கொழும்புக்குப் போக முன்னம் அக்காவைக் கூட்டிக் கொண்டு வீட்டுப் பக்கம் ஒருக்கா வந்தா என்ன?' என்றார் நடா மச்சாள். எல்லோரும் புறப்பட்டனர்.

நடா மச்சாள் வீட்டில் எல்லாருக்கும் பார்ட்டி ஒழுங்குபடுத்தப்பட்டது. எல்லாவகை மாமிசங்களும் பரிமாறப் பட்டது. நடா மனைவி, டொக்டர் மச்சாள் ஆகியோர் இருந்தபடியால் தண்ணி மட்டும் இல்லை. விசேடமாக தயாரித்து வைத்திருந்த மல்லிக் கோப்பி, சரக்குத் தூள் என்பனவற்றைப் பார்சல் பண்ணி நடா மனைவி கையில் கொடுத்தார் நடா மச்சாள். அதை வாங்கிக் கொண்டு 'அடுத்த ஹொலிடேக்கு எல்லாரையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு வந்தால் என்ன? ' என்று ஒரு ஒப்பின் இன்விற்றேசனை நடா மச்சாள் குடும்பத்துக்குக் கொடுத்தார் நடா மனைவி.

எல்லோரும் சென்று காரில் ஏறினார்கள். நடா மட்டும் லேட். நடா தனது மச்சாள் குடும்பத்துடன் கதைத்து விடைபெறும் நேரம்... நடா தனது மச்சானை கட்டிப் பிடித்து முத்தமிட்டார். பிரியமனமில்லாதவராய் அனைவரையும் பிரிந்தார் நடா.

கார் சுந்தர்மடத்துக்கு வந்தது. வீட்டிலும் ஒரே அமர்க்களம். நடா கொழும்புக்குப் போவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினாள் வேலைகாரி.

'என்ன ஐயா! பயணமாம்?' வாஞ்சையுடன் கேட்டாள் அவள். அவள் கண்களும் பனித்திருந்தன. அன்பின் அடையாளமாக அவள் கையைப் பற்றினார் நடா.

(தொடரும்)

## அம்மா... அம்மா...



குண்டு வீச்சில் நீ
இறந்துவிட்டாய் அம்மா
எப்படி உன்னை நான்
தூக்கிச் செல்வேன்
நேற்று நீ பஞ்சு முட்டாய்
ஊட்டியதை மறக்கவில்லை
ஆசையாய் என்னை பள்ளிக்கு
அனுப்ப இனியாரம்மா எனக்கு
நான் அழும் போது எல்லாம்
என்ர வயிற்றிலஇருக்கின்ற தங்கச்சி
உன்னோடு விளையாட வருவாள்
என சொல்லுவாய் அம்மா...!
தண்ணீர் அள்ளிவர உன்
இடுப்பிருத்தி ஆற்றங்கரைக்கு
அழைத்துச்செல்ல செல்லுவாய்
அம்மா குண்டு உன் அருகில்
விழும் போது என்னை பங்கருக்குள்
தள்ளியதை நினைத்துப்
பார்க்கின்றேன் உன் பாசம்
புரியுதம்மா ஐ.நாவும்
செஞ்சிலுவைச் சங்கமும் இருந்து
என்ன பயன் அம்மா...?
இனி அம்மா வீட்டை
வரமாட்டியா?

ஆ.முல்லைதிவ்யன்

## மனதுக்குள் கிடக்கு உயிர் கொல்லும் வலிகள்

தனிமையில் உழலும் தூரதேச
வாழ்வில் துயர்மிகு கனவுகள்
பலநாள் தூக்கம் கலைத்துவிடுகிறது
விழியில் வெளியில் சொல்ல முடியாத பல
கவலைகள் ஆத்மாவை கட்டிப்போடும்
இரவுகளில்...
கனவுகளின் கோபுரமும்
களைத்துப்போன உடலை
உடைத்துப்போடும்
மனைவி பிள்ளைகள் பற்றிய
கவலைகள் ஒரு புறம்.......
தாயகம் பிரிந்த பெருவலி மறுபுறம்....
வலிகளின் மேலே வலிகளை ஏற்றும்
அடுத்தவன் ஊருக்கு போகும் போது
அவனை பார்த்து உதடுகள் புன்னகைத்தாலும்
மறுகணம்.....
நாம் எப்போது ஊருக்குப் போவோம் என்ற
படபடப்பு பரிதவிக்கும்
வீட்டுக் கஷ்டங்களை நினைத்தால்
நாட்டு நினைவுகள் மறந்துவிடும்
இருந்தாலும் அடி மனதில் இளைப்பாறி
மீண்டெழும்
மாதச் சம்பளம் எடுத்தவுடன்
நமக்கு கையில் பணம் இல்லாமல்
விட்டாலும் பரவாயில்லை
வீட்டுக்கு முதலில் பணம் அனுவிட்டு
பணம் கையில் கிடைத்துவிட்டது என்று
அவர்கள் சொல்லும்
ஒற்றை வார்த்தையில்
ஒரு மாதப் பசியும் மறந்துபோகும்
பசிக்கிற வயித்துக்கு பதில் சொல்ல வேண்டி
பெப்ஸி டப்பாக்களை
பொறுக்கி விற்பேன்
ஊரில் துச்சமாக
எண்ணிய பணியது
இங்கு இஷ்டப்படி செய்வேன்
அஞ்சி அஞ்சி உழைத்து
குடும்ப கஷ்டம் நீக்க....

–நிதா கரன்



சந்திப்பு: அகரன்

# இடப்பெயர்வு தந்த வலிகள்

போரின் வலிகளை இன்று அனுபவிக்காத போதும், அது ஏற்படுத்திச் சென்ற வடுக்களை இன்னமும் மறக்கவில்லை. 1995 ஒக்ரோபர் 30 ஆம் நாள் நம் தாய் நிலமான -யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்தோம்.

தாய் நிலத்தையும் - சொந்த பந்தங்களையும் - அன்பாக வளர்த்த செல்லப் பிராணிகளையும் - சொத்துக்களையும் பரிதவிக்க விட்டு, உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு சுமக்கக்கூடிய பொருட்களைச் சுமந்து கொண்டு நடக்கக்கூடிய உறவுகளை மட்டும் அழைத்துக் கொண்டு ஒரே இரவில் இடம்பெயர்ந்தோம்.

நடக்க முடியாத தாயையும் தந்தையையும் சுமக்க முடியாமல் வீடுகளிலும், வயோதிபர் இல்லங்களிலும் விட்டுச் சென்று போர் வெம்மையிலும் பசியிலும் பிணியிலும் உதவியின்றி அவர்கள் இறந்ததும், இறந்த நாள்கூட தெரியாது தங்கள் பெற்றோரை - உறவினரை நினைத்து வருந்தியதும். நீரின்றி, உணவின்றி பட்டினி கிடந்த கணங்களும் வறுமையில் உழன்ற நாள்களும் அவை ஏற்படுத்திய ரணங்களும் இன்னமும் ஆறவில்லை. 22 ஆண்டுகள் கழிந்தும் ஆறாத மக்களின் மனக்காயங்களை கொட்டியவர்களில் சிலர்...

கோப்பாயை சேர்ந்த 58 வயதான இரத்தினசிங்கம் இந்திராணி இடப்பெயர்வின் அனுபவங்களைப் பகிர்கிறார்...

'பலாலியில இருந்து ஆமிக்காரன்கள் ஷெல் அடிக்க ஆரம்பிச்சுட்டாங்கள். எங்களுக்கு உயிர்போய் உயிர் வந்த தருணம் அது. ஷெல் அடித்துக் கொண்டு ஆமிக்காரர் முன்னேறி ஆவரங்காலுக்கு வந்திட்டாங்கள். நீர்வேலியில விழுந்த ஷெல் எங்கட இடத்தைச் சுத்தி விழ ஆரம்பிச்சிட்டு. கோப்பாய் சந்தியில ஷெல் விழத் தொடங்கிய ரெண்டாம் நாள் எல்லாச் சனமும் குடும்ப கார்ட் அதோட முக்கிய ஆவணங்களை எடுத்துக் கொண்டு இடம்பெயர தொடங்கிச்சினம். நாங்களும் அவையளோட சேர்ந்து வெளிக்கிட்டம். கோப்பாய் சந்தியால கைதடிக்குப் போனம் இரண்டு நாள் அங்க இருந்திட்டு, சாவகச்சேரி துணாவிலுக்குப் போய்ட்டம். அங்க, சனங்களை துரத்தித் துரத்தி கிபீர் குண்டு போட்டுது. பழைய பொலிஸ் ஸ்ரேசனில குண்டு விழுந்து அது தரைமட்டமானது.

தொடந்து கிபிர் குண்டு போட, அங்கு இருக்க முடியாமல் மிருசுவிலுக்கு போனனாங்கள். நாலு நாள்தான் இருந்திருப்பம், ஆமிக்காரன் பிடிச்சாலும் என்ற பயத்தில மகளுக்கு உடனேயே கலியாணம் செய்து வைச்சிட்டம். மகனும் இளந்தாரி எண்டதால் அதுவும் பயமாக இருந்தது. அதால, நாங்கள் கிளாலியால் கிளிநொச்சிக்குப்போய் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில தங்கியிருந்தனாங்கள். இயக்கப் பெடியன்கள் (விடுதலைப் புலிகள்) எங்களைக் கூட்டிக் கொண்டுபோள் புளியங்குளம் புதூரில விட்டவை. அங்க போய் ஒரு மாதத்தில் அப்பா இறந்து போய்ட்டார். (கண் கலங்கி பேச்சை நிறுத்தி பின் தொடர்ந்தார்)

ஆறு மாதம் அங்க இருந்திட்டு மாங்குளம் - கொள்ளவிளாங்குளத்தில இயக்கப் பெடியள் கட்டித் தந்த வீட்டில இருந்தம். அதிலயும் ஆறு மாசம்தான் இருக்க முடிஞ்சுது. சண்டை தொடங்க இடம்பெயர்ந்து மல்லாவி பாலையடிக்குப் போனம். கிட்டத்தட்ட 3 வருசம் அங்க இருந்தம். 98 ஆம் ஆண்டு அங்கயும் சண்டை, ஷெல் விழத் தொடங்க துணுக்காய்க்கு இடம்பெயர்ந்து போனம். பள்ளக்கூடம் ஒன்றில அடைக்கலமானோம். அங்கயும் சண்டை தொடங்க, புதுக்குடியிருப்புக்கு போனம். 2002 ஆம் ஆண்டுவரை அங்கதான் இருந்தம். பிறகு சமாதானம் வந்து பாதை திறந்த பிறகுதான் திரும்ப யாழ்ப்பாணத்துக்கு வந்தம்." என்று தங்களின் துன்பக் கதையை முடித்தார்.

'சண்டை பற்றிய நினைப்பே இல்லாமல் இருந்தனாங்கள். திடீரென சண்டை தொடங்கீட்டு, பலாலிப் பக்கம் இருந்து ஆமி குண்டுகள் எங்களுக்கு பக்கத்தில விழ வெளிக்கிட்டுது. என்ன செய்யிறது எண்டு தெரியாமல் திக்கு முக்காடிப் போனோம். குண்டுகள் விழுந்து ஆக்களெல்லாம் செத்துக் கொண்டிருக்கிறார்கள் எனறு செய்தியும் எங்கட காதுக்கு எட்டியிருந்தது. அதால 'சரியா" (அதிகமாக) பயந்து போனோம். அடுத்த நாள் இயக்கப் பெடியள் மக்கள் எல்லோரையும் இடம் பெயர்ந்து போகச் சொல்லி அறிவிச்சான்கள். முன்னேறிப் பாய்தல் இடப்பெயர்வு மாதிரி இருக்கும் எண்டுதான் அப்ப நினைச்சம். கனக்கப் (அதிகளவிலானோர்) பேர் செத்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவம் எண்டு கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்கேல்ல. கையில எடுத்த பொருட்கள் பாதி எடுக்காத பொருட்கள் பாதி எனக் கையில் கிடைச்சதை எடுத்துக் கொண்டு இடம்பெயரத் தொடங்கினம். நாவற்குழிப் பாலத்தைக் கடக்கிறது' ஒரு யுகம் போல் இருந்தது. ஒரு அடி எடுத்து வைக்க முடியாமல் தத்தளித்தோம். அதை இப்ப நினைச்சாக் கூட கால் கூசுது. உயிரோட பாலத்தை கடந்து போவமா? மாட்டமோ என்று தெரியாத நிலைதான் இருந்தது. நாங்கள் பட்ட அந்தக் கொடிய துன்பத்தை யாரும் அனுபவிக்கக் கூடாது." என்று தனது துயரக் கதையை சொன்னார் இருபாலையைச் சேர்ந்த 37 வயதான மகாலிங்கம் கமலநாதன். நல்லூரைச் சேர்ந்த உளவளத் துணையாளரான திருமதி ஷிரோமி லெனாட் (வயது 55) தான் சந்தித்த மோசமான அனுபவங்களைப் இப்படிப் பதிகிறார்...

'பலாலியில இருந்து இராணுவம் குண்டு மழை பொழிந்தது. இயக்கம் (விடுதலைப் புலிகள்) எல்லோரையும் ஊரை விட்டு வெளிக்கிட்டுப் போகுமாறு அறிவித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில நான் என்ர வேலை இடத்திலையும் அவர் அவரின்ர வேலை இடத்திலையும் வேலை செய்து கொண்டிருந்தனாங்கள். சனங்கள் நிண்ட நிண்ட கோலத்தோடை சாமன்களை (பொருள்களை) எடுத்ததும் எடுக்காததுமாய ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர் வேலையில இருந்து எனக்கு முன்னமே வீட்ட வந்து என்னைக் காணேல்ல எண்டு தேடிக் கொண்டிருந்தார். நானும் சிறிது நேரத்திலயே வீட்டை போய்ட்டேன். அப்ப எங்களுக்கு ஒரு மகள்தான் இருந்தவள். பலாலியில இருந்து இராணுவம் முன்னேற ஆரம்பிச்சிட்டுது. என்ன செய்வது எனத் தெரியாமல் பயத்தில நாங்கள் இடம்பெயரவில்லை. நாங்கள் அப்ப இருந்த வீடு மாடி என்ற படியால் துவக்குச் சூட்டுக்கும், குண்டுச் சன்னங்களுக்கும் அகப்படா மல் பாதுகாப்பாக இருந்தோம். எங்கட சொந்தக்காரர்களும் தெரிந்தவர்களும் எங்கட வீட்டில வந்து இருந்தார்கள். எல்லா சனங்களும் வெளிக்கிட்டு (இடம்பெயர்ந்து) போய்க் கொண்டிருந்தாங்கள். எங்கட சொந்தக்காரில ஒருவருக்கு


இந்திராணி


கமலநாதன்


ஷிரோமி


ஜஸ்ரின்

( மறு பக்கம் பார்க்க)

# இடப்பெயர்வு தந்த வலிகள்




யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் குழந்தை பிறந்திருந்தது. அவைகூட சேலைன் போத்தலை கழட்டிப் போட்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு இடம்பெயர்ந்தார்கள். டொக்ரர்மாரும் வீடுகளுக்குப் போய் வீட்டுக்காரரைக் கூடிக்கொண்டு ஊரை விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள்.


எங்க போறது எண்டு தெரியாமல் வீட்டிலேயே இருந்தம். எங்க போறது தங்கிறது எண்டு தெரியாது, போறதுக்கு வாகனமும் இல்லை. நாவற்குழிப் பாதையெல்லாம் போக ஏலாமல் ஆட்கள் நெரிசலா நிற்கினம் எண்டு கேள்விப்பட்டம். அதுவேற எங்களுக்கு சலிப்பாக இருந்தது. அதால கடைசி வரைக்கும் இருந்து பார்ப்பம் எண்டு நல்லூரிலேயே இருந்திட்டம். வீட்டில மா, அரிசி குறைவாத்தான் இருந்தது. சனங்கள் வெளிக்கிட்டதால பேக்கரிக்காரர் தங்களிட்ட இருந்த மாவை குறைந்த விலைக்கு வித்தார்கள். அவையிட்ட மாவை வாங்கியும், தோட்டத்தில கிடந்த மரக்கறியையும் பிடுங்கி வீட்டில் இருந்தவைக்கு சமைத்துக் கொடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

மிக மோசமாக ஷெல்கள் வந்து விழ வெளிக்கிட்டுது. உரும்பிராய்க்கு இராணுவம் வந்திட்டு, எங்கட இடத்துக்கப் பக்கத்தில இருந்த சிறிய கோயிலிலும் ஷெல் விழுந்தது. அதையும் பார்த்திட்டு பயத்தோட வீட்டில இருந்தம். சண்டை முடிஞ்சதும் இராணுவம் திரும்பிப் போயிடும் நாங்கள் இங்கேயே இருப்பம் எண்டும் எங்களுக்கு ஒரு நினைப்பும் இருந்தது. அப்படிப் போகேக்க ஏலாத (இயலாத) ஒருவர் ஆனைப்பந்தியில விழுந்து கிடந்திருக்கிறார். அவரைக் காப்பாற்றி அவருக்கு சாப்பாடு கொடுத்து கொஸ்பிட்டலில கொண்டுபோய் சேத்துவிட்டு வந்தார். நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டிருந்தது. ஹெலிகப்டரும் வந்து சுடத்தொடங்கிட்டுது. இனியும் இருக்க முடியாது என்று நாங்களும் வீட்டில இருந்தவங்களும் சேர்ந்து முக்கியமான சாமான்களை எடுத்துக் கொண்டு எல்லோரும் இடம் பெயர்ந்து போன 11 ஆம் நாள் வெளிக்கிட்டம் எங்க போறதெண்டு தெரியாமல் கரவெட்டிக்குப் போனம். அங்க ஒரு வீட்டில் மாடு கட்டியிருந்த இடத்தை எங்களுக்கு இருக்கத் தந்தாங்கள். 24 பேர் அவையின்ர வீட்டுக்குள் படுத்தனாங்கள் திரும்பக்கூட முடியாமல் ரொம்பக் கஷ்டப் பட்டம். இதற்கிடையில மகளும் காணாமல்போயிட்டா 3 நாள் கழிச்சுத்தான் கண்டுபிடிச்சம்.

இடம்பெயர்ந்து போன ஆக்களும் போன இடங்களில கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்திகளைக் கேள்விப்பட எங்களுக்குப் போக விருப்பம் வரேல்லை. இவருக்கு (கணவருக்கு) இருக்க கொஞ்சம்கூட விருப்பமில்லை. அந்த நேரத்தில இவர் என்ன நடக்குது என்று பார்க்க வெளியில போய் வருவார்.

வீட்டில இருந்து கொண்டு போன மாவில ரொட்டி சுட்டுச் சாப்பிட்டம் அங்க, எங்களுக்கு ஒரு மறக்க முடியாத நெகிழ்ச்சியான சம்பவம் ஒண்டு நடந்தது. எனது மகளுக்கு அப்ப மூன்று வயசு. நான் கொடுத்த ரொட்டிகளை எடுத்துக் கொண்டுபோய் மற்ற பிள்ளைகளுக்கு கொடுத்திட்டு கடைசியாக தனக்கு ஒண்டும் இல்லாமல் தான் கொடுத்தவையிட்டையே கொஞ்சம் கேட்க அவை குடுக்கெல்ல அது எங்களுக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. அதை இன்றும்கூட மறக்காமல் மகளுக்குச் சொல்லிச் சிரிக்கிறனாங்கள். யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடிச்ச பிறகு நாங்கள் மீண்டும் எங்கட வீட்டுக்கு வந்திட்டம். அப்படி ஒரு மோசமான சம்பவம் திரும்ப வரவே கூடாது."






**கொழும்புத்துறையை சேர்ந்த ஜோர்ஜ் ஜஸ்ரின் (வயது -36) தனது அனுபவங்களை அசைபோடுகிறார்...**

' சண்டை நடக்கும்போது எனக்குப் 15வயது - 10ஆம் ஆண்டு படிச்சுக் கொண்டிருந்தனான் எனக்கு அப்போதிருந்தே இசைக்கருவிகளில் ஆர்வம் அதிகம். நிறைய இசைக் கருவிகளுடன் ஒரு குட்டி லைபிரரியும் (நூலகம்) வைச்சிருந்தனான். திடீரெண்டு சண்டை தொடங்கினதால எல்லோரும் இடம்பெயரத் தொடங்கீட்டினம். நாங்களும் இடம்பெயர்ந்தம். சேகரிச்ச எல்லாவற்றையும் விட்டிட்டுப் போறமெண்டு எனக்குச் சரியான கவலை. அப்படியே எடுத்த பொருட்களோடு வெளிக்கிட்டுப் போய்க் கொண்டிருந்தம். அந்த நேரத்தில் என்ர சைக்கிளுக்கும் காற்றில்லாமல் போட்டுது. சைக்கிள உருட்டிக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறன், நாவற்குழியில, சனங்கள் போக முடியாமல் நிறைஞ்சுபோய் நிண்டினம்.

நாவற்குழியில் அம்மா வேற, நான் வேறா துலைஞ்சிட்டன் (காணாமல் போய் விட்டேன்). நகர முடியாமல் வீதிக் கரையில படுத்திட்டு, பிறகு ஒருவழியா மீசாலைக்குப் போட்டன். மூன்று நாளுக்குப் பிறகுதான் வீட்டுக்காரர் கச்சாயில் இருக்கினம் எண்டு அறிஞ்சு, அவையைத் தேடிப் போனன். அவை கொடிகாமம் - கச்சாய் றோட்டில இருந்த சம்பேதுருவானவர் ஆலயத்தில் இருந்தினம். ஆறு மாசம் அங்கேயே இருந்தம். அங்கே இருந்து கொண்டுதான் ஓ.எல் (க.பொ.த. சாதாரண தரம்) படிச்சனான். கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் ஓ.எல். பரீட்சை எடுத்தனான். ஒரே பிரச்சினைகளால் படிக்க முடியேல்ல. அதால் பரீட்சையில பெரிசா சாதிக்க முடியேல்ல. பிறகு ஒரு நிறுவனம் எங்களுக்கும் எங்களுடன் இருந்த ஆக்களுக்கும் பருப்பும் சோறும் தந்தாங்கள் அந்த நேரம் அது எங்களுக்கு பெரும் அமிர்தமாக இருந்தது.

நாங்கள் ஊர்ல இருக்கும்போது சிறுவர் கழகத்தில் இருந்தனாங்கள் புத்தூர், சுழிபுரம் போன்ற இடங்களில் சிறுவர் கழகங்கள் இருந்தது. அது அங்கு இருக்கும்போது பெடியளுடன் தொடர்பு கொள்ளப் பெரும் உதவியாக இருந்தது. அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எங்களுடைய தேவைகளை ஓரளவுக்குப் பூர்த்தி செய்து கொண்டிருந்தம். அந்த நேரத்தில் நிறுவனத்துடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொன்னோம். ஆறு மாதத்தில் நாங்கள் திரும்பி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்திட்டம். எங்கட வீடு உடைச்சு களவு போயிருந்தது. நான் வைச்சிருந்த குட்டி லைபிரரியும் இல்லாமல் போட்டுது. அந்த மோசமான நினைவுகள் இப்ப நினைக்கவும் வேதனையாக உள்ளது.




தற்போது, வடபகுதியில் தமிழ் குறும் படங்களின் தயாரிப்பு என்பது தீவிரமடைந்ததொரு முயற்சியாகக் காணப்படுகிறது. புலிகளின் கலை, பண்பாட்டுப் பிரிவினாலும், பிரசாரப் பிரிவினாலும் ஒரு துறை சார்ந்து ஆரம்பிக்கப்பட்ட முயற்சி புலிகளின் அஸ்தமனத்துக்குப் பின்னர் தனி நபர்களினால் தொடரப்பட்டுக் கொண்டிருக்கிறது. தரமான திரைப் படங்களை எடுக்க வேண்டும் என்பதற்கு அப்பால் பெரும்பாலும் திரைத் துறைக்கான ஒரு நுழைவாயிவலாகவே பலர் குறும்படத் தயாரிப்பை எண்ணுகின்றனர். இது ஆரோக்கியமற்ற அணுகுமுறை எனக் குறிப்பிட்டிருக்கும் கேதாராநாதன் அது பற்றித் தனது கட்டுரையிலே விரிவாக எழுதியிருக்கிறார்.

சர்வதேசத் தரம் வாயந்த குறும் படங்களைப் பார்க்கும்போது ஏற்படுகின்ற உத்வேகமும், அது பற்றிய பிரக்ஞைபூர்வமான எண்ணங்களினாலும் உந்தப்படுகின்ற ஒவ்வொரு நொடிப் பொழுதும் எமது கதைகளையும் அத்தகைய வடிவில் காணவிழைகின்றது எம் மனம். ஆனால் போருக்குப் பின்னால் தமிழ் பரப்பில் புதையுண்டு கிடக்கும் எத்தனையோ ஆயிரம் கதைகளை எமது முயற்சியாளர்கள் குறும்படமாகக் கொண்டு வருவார்கள் என்றிருந்தோம். பெரும்பாலும் ஏமாற்றமே கிடைத்திருக்கிறது - என்கிறார் ஒரு மாற்றுச் சினமா ஆர்வலர்.

2015ஆம் ஆண்டு வட மாகாண சபையின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஆய்வரங்கு தொடர்பான நூல் ஒன்றில் சினமா ஆய்வாளர் ஜி.ரி.கேதாரநாதன் எழுதிய கட்டுரை குறும்படங்கள் குறித்த பலதரப்பட்ட தகவல்களை தந்தது. குறும்படங்கள் தொடர்பான தேடல், வேட்கை உள்ளவர்களுக்கும், ஊடகக் கற்கை மாணவர்களுக்கும் குறும்பட ரசிகர்களுக்கும் இந்தக் கட்டுரை மிகப் பயனுடையது. இந்த வகையில் இக்கட்டுரை மீள்பிரசுரமாகிறது.

- ஆசிரியர்




# குறும்படங்கள் ஒரு பார்வை



- ஜி.ரி. கேதாரநாதன் -

உண்மையைச் சொல்லும் கலைதான் உன்னதக் கலையாகும். குறும்படங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. குறும்படங்கள் மிகவும் வலிமை வாய்ந்தவை. முழுமையானதொரு அனுபவத்தை அவற்றால் தோற்றுவிக்கவும், தொற்ற வைக்கவும் முடியும். ஒரு சின்னப்புல்லும் அதன் வடிவில் முழுமை என்பது ஈழத்துக் கவிஞர் சண்முகலிங்கம் சிவலிங்கத்தின் அற்புதக் கவிதை வரியாகும்.

குறும்படம் என்பது நிச்சயமாக மாற்று ஊடகமாகும். சந்தையில் விற்பதற்கான சரக்கல்ல. குறும்படம் சொல்லமுடியாத, அணுகமுடியாத பலவற்றை அவற்றின் வலிமை குன்றாத விதத்தில், நீர்த்துப் போகாது காட்சி ரூபத்தில் இயல்பு கெடாமல் சிக்கனமாகச் சொல்லுகின்றபோதே அது குறும்படத்திற்கான நேர்மையை, அதற்குரிய கலைப்பெறுமானத்தை எட்டுகிறது. சிறுகதையை குறும்படத்திற்கும், நாவலைக் கதைப்பாங்கான திரைப்படத்திற்கும் ஒரு விதத்தில் ஒப்பிடலாம். இரண்டிற்கும் பல ஒத்ததன்மைகள் இருக்கின்றன.

குறும்படப் பயிலரங்குகள் மூலமான பயிற்சி, பிரக்ஞை பூர்வமான ஈடுபாடு, நீண்ட தொடர்ச்சியான இலக்கிய அனுபவங்கள் போன்றவை சிறந்ததொரு குறும்படத்தை உருவாக்குவதற்கு எப்போதுமே உத்வேகம் அளிப்பவை. பிரமாண்டங்கள், அதீதங்கள், நீண்ட உரையாடல்கள் என்பன குறும்படங்கள் மீது பலவீனமான பார்வையை உருவாக்கவல்லன. திரையுலக நுழைவுக்கான வாய்ப்பாகவோ அல்லது அவற்றின் பிரதியீடாகவோ குறும்பட முயற்சி ஒரு போதும் இருத்தலாகாது. கலைஞர் தொலைக் காட்சி (இதனை நம்மவர்களும் பார்ப்பதனால்) அண்மைக் காலமாக 'நாளைய இயக்குனர்' மூலம் குறும்பட ஊடகத்தை உருத் தெரியாமல் சிதைத்துவிட்டது. 'கார்ப்பிரேட்' டே தர வீழ்ச்சிக்கான மூல்காரணமாகும்.

குறும்பட அழகியல் தனித்துவமானது. உலகளாவிய ரீதியில் பெரும்பாலும் இதனை மாற்றுப் பரீட்சார்த்த முயற்சிக்கான ஊடக மாகவே கருதுகிறார்கள். ஆனால் இங்கு நடப்பதோ வேறு. குறும்படங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட தமிழ்ச் சினிமாக்களின் பாணியிலான 'மினி' வடிவங்களாகத் தயாரிக்கப்படுகின்றன. இதற்கான வீண்செலவினங்கள் மிக அதிகமாகும். பிரமாண்டங்களின் 'மினி' வடிவங்களாக எல்லாத் தளங்களிலுமே அவை அவற்றிற்குரிய உள்ளர்ந்த வீறுகளை இழந்து போலிகளாக மலினமடைந்து போய் விடுகின்றன. இடுத்த கட்ட இயக்குனர்களாக அவர்கள் தம்மைக் கருதிக் கொண்டு பெரும் எடுப்பில் தயாரிப்பில் மூழ்கிறார்கள். இதன் விளைவு என்ன என்பது எல்லோரும் அறிந்ததே. சினமாவிலிருந்து சினமாவை உருவி எடுத்து, ஒரு மினி சினமாவைக் குறைந்த நிமிடங்களில் எடுக்கிறார்கள். பெரும்பாலோருக்குச் சொந்தமாகக் கதையோ, வாழ்வு அனுபவங்களோ கிடையாது.

அண்மைக்காலத் தமிழ் குறும்படங்களின் முயற்சிகள் மற்றும் வெளியீடுகளைப் பார்க்கும்போது அவற்றின் தன்மைகள், போக்குகள் எமக்குள் ஏமாற்றங்களையும், அதிருப்திகளையும் ஏற்படுத்துகின்றன. வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினர் எனது பார்வைக்காக இருபது குறும்படங்களைத் தந்து அதையொட்டி, விமர்சன பூர்வமான குறும்படங்கள் தொடர்பிலான கட்டுரை ஒன்றினை எழுதுமாறு பணித்திருந்தார்கள்.

வாழ்வியல் பற்றிய ஆழ்ந்த அனுபவம், கருத்தாங்கள், அலக்கிய வாசிப்புகள், தொழில் நுட்பம் பற்றிய அடிப்படை அறிவு, அவ்வப் பின்னணிகளுக்குரிய அரசியல் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய கிரகிப்பு என்பனவற்றின் பிரதிபலிப்பாக நன்கு படைக்கப்படுகின்ற, சிலாகித்துப் பேசப்படுகின்ற குறும்படங்களுடன் ஒப்பிடும்போது, இக் குறும்படங்களில் பெரும்பாலானவை ஏமாற்றத்தையே அளித்தன. கருத்தாக்கத் தன்மையின் பலவீனம், பிரசாரத் தன்மை, நாடகப் பாங்கான தாக்டகங்கள் போன்றவற்றை பலவீனமான அம்சங்கள் எனக் குறிப்பிட முடியும். பெரும்பாலான நெறியாளர்களின் ஆழமற்ற மலினப்பட்ட ஜன ரஞ்சகத்தன்மை, விரவிய வாழ்வியல் நோக்கு மிகுந்த விசனத்தையும், அதிருப்தியையுமே ஏற்ப்படுத்தின. அத்துடன் யதார்த்தற்குப் புறம்பான வாழ்க்கை அனுபவங்களுடன் ஒட்டாத, அதீத உணர்வுகளாலான சித்தரிப்புகள் தொடர்பில் நெறியாளர்களின் கலைரசனைமீது கேள்வியினை எழுப்புவது தவிர்க்க முடியாத தொன்றாகிவிடுகிறது.

சகமனிதர்களின் சுக துக்கங்கள், இழப்புகள் மற்றும் அவலங்களை வெளிப்படுத்துவதோ அல்லது பகிர்ந்து கொள்வதோ குறும்படத்தின் அடிப்படை அம்சம் எனலாம். வாழ்வு மிகவும் கடுமையானது. சில வேளைகளில் புதுமையானதும் கூட. எந்தவிதத்திலுமே அது ஒரு புதிர்தான்.


வாழ்வை மிகவும் நெருக்கமாக, மெய்மை உணர்வுடன் அணுகிப் பார்வையைச் செலுத்துவதற்குத் திரைப்படைப்புகள் முயற்சிக்கின்றன. சமூகத் தளத்தில் வாழ்வியலின் நெருக்கடிகளை, அவற்றின் கூறுகளை நன்கு கிரகித்துக் கொண்டாலே அர்த்தமுள்ள நல்ல படைப்புக்களைப் படைப்பாளிகளினால் உருவாக்க முடியும். ஆற்றல் மிக்க நெறியாளர் ஒருவரின் முயற்சி இத்தகையதொரு தடத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது.

இத்தகையதொரு பின்னணியில் உலகக் குறும்படப் போட்டியில் 2005 ஆம் ஆண்டில் முதல் விருதினைப் பெற்ற ஹங்கேரிய குறும்படமான 'BEFORE DAWN' (விடியலுக்கு முன்பு) ஆர்வத்துடன் நோக்கத்தக்கது. இக் குறும்படம் 100 உலகக் குறும்பட விழாக்களில் தெரிவாகியதுடன் சுமார் 40 உயர் விருதுகளையும் சுவீகரித்துக் கொண்டது. அவற்றுள் ஐரோப்பிய திரை நிறுவனத்தின் அதியுயர் விருதான '2005 ஆம் ஆண்டுக்குரிய முதல் தரக் குறும்படம் ' என்ற தெரிவு குறிப்பிடப்பட வேண்டியதொன்று. அந்தக் குறும்படத்தின் நெறியாளரான பலின்ற் கெனியெறாஸ் அவரது நேர்காணல் ஒன்றில் பின்வருமாறு கூறுகிறார்.

'இதைப் போன்றதொரு குறும்படத்திற்கு முதன்மையானது என்னவெனில், சரியான படப்பிடிப்புக்கான பொருத்தம் வாய்ந்த சூழலுடன் கூடிய தளமே ஆகும். இன்னும் சரியான உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்தும் முகங்கள் , நடிகர்கள், கதாபாத்திரங்கள், இவற்றின் பின்பே நெறியாளரின் பார்வை முக்கியத்துவம் பெறுகிறது. இதையடுத்துப் பல நுணுக்க விவரங்களுடன் 'கமெரா' நகர்த்தப்படுகிறது. சாத்தியமான ஒவ்வொரு கோணங்களிலும் 'கமெரா' நகர்கிறது. உண்மையிலேயே இவையெல்லாம் கைகூடிச் சித்திக்கும்போதே, படைப்பாற்றலின் பரவசம் எனக்குக் கிட்டுகிறது' - இது குறும்பட நெறியாளர் ஒருவரின் தரிசனத்தையும், அவருக்கு இருக்க வேண்டிய முழுமையான உழைப்பையும் எமக்கு நன்கு புலப்படுத்துகிறது.



- தொடரும்.




...பிரபாஸ் நடிக்கும்
...முதல் பார்வை
...ப்பட்டது.
...தயாராகும் இந்தப்
...“பிளேட் ரன்னர்
...ட்டப்
...
...கள் “சாஹோ”
...டுத்து வருகிறார்கள்.



ஹரி இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் “சாமி 2” படத்தில் இருந்து த்ரிஷா விலகியுள்ளார். கருத்து வேறுபாடு காரணமாகவே இப்படத்தில் இருந்து விலகினார் என திரிஷா தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஹரி இயக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வெளியான சாமி படத்தில் விக்ரம் - திரிஷா நடித்திருந்தனர். பெரு வெற்றி பெற்ற இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகி வருகிறது.

இதில் விக்ரம், திரிஷாவுடன் கீர்த்தி சுரேஷ், பாபி சிம்ஹா, பிரபு, சூரி ஆகியோர் ஒப்பந்தமாகியிருந்தனர். இந்நிலையிலேயே திரிஷா வெளியேறியுள்ளார்.

அரசியல் விவாதங்களில் தூள் கிளப்பி வரும் கஸ்தூரி, ரஜினி அரசியலுக்கு வருகிறார் என்ற போது அவருக்கு ஆதரவு தெரித்தார். அரவிந்த் கெஜ்ரிவால் சென்னைக்கு வந்து கமல்ஹாசனை சந்தித்தது குறித்து அப்போது ட்விட்டரில் கருத்து தெரிவித்த கஸ்தூரி, ‘இருவருமே ஊழலுக்கு எதிரானவர்கள். கமல்ஹாசனிடம் இருந்து விரைவில் பெரிய அறிவிப்பு வரும்’ என சிலாகித்தார்.

கமல்ஹாசனை ஒருமுறை நேரில் சந்தித்தும் பேசினார் கஸ்தூரி. இந்த நிலையில் கமல்ஹாசன் 8 அடி பாய்ந்தால், விஜய் 48 அடி பாய்வார் என நடிகை கஸ்தூரி ‘டிவிட்’செய்து உள்ளார் .



...ஹாலிவூட் பட தயாரிப்பாளர், இயக்குநர் ஹார்வே ...ரெய்ன் ஐஸ்வர்யா ராயை பாலியல் வன்புணர்வுக்கு ...த்த முயன்றார் எனப் பகீர் தகவல் வெளியானது. ...நிலையில் “பாலியல் பிரச்சினை சினிமாவில் மட்டுமல்ல ...த் துறையிலும் உள்ளது. ஆணாதிக்கத்தின் விளைவே ...மட்டுமன்றி அதிகாரம், அந்தஸ்து இதற்கான ...திரைப்படத் துறையில் "பிக்போய்ஸ் கிளப்" என்ற ...கூட்டம் இருக்கிறது. அவர்களின் கட்டுப்பாட்டுக்கு ...உடன்படாவிட்டால் ஒட்டுமொத்தமாக அவர்கள் ...புறக்கணிப்பார்கள்" என அதிர்ச்சி தகவலை ...ருக்கிறார் பிரியங்கா சோப்ரா.

கபாலி, வேலை இல்லா பட்டதாரி என ...செலவு படங்களை தயாரித்த கலைப்புலி ...தாணுவின் “இந்திரஜித்” படம் நவம்பர் 3 இல் ...யாகவுள்ளது.

...கௌதம் கார்த்திக் நாயகனாக நடித்துள்ள இந்தப் ...தை தயாரிப்பாளர் தாணுவின் மகனான ...பிரபு இயக்கியுள்ளார்.

...ஆண்டுகளாக நடந்த இப்படத்தின் படப்பிடிப்பு ...ஆண்டே முடிவடைந்த போதும், படம் ...யாகவில்லை. கௌதமின் பல படங்கள் ...யடைந்ததைத் தொடர்ந்து இப்போது “...ரஜித்” படத்தை வெளியிடவுள்ளார்கள்.



# வியூகம்




தொகுப்பு :- சி.விமலன்

கிரிக்கெட் போட்டிகளில் பந்து வீச்சாளர்களின் விருப்பத்திற்கு அமையவும் அணித் தலைவரின் வேண்டுகோளுக்கு அமையவும் கள வியூகங்கள் அமைக்கப்படுவதுண்டு. போட்டியின் அந்தநேர சூழ்நிலைக்குத் தகுந்தால் போல அவை தீர்மானிக்கப்படும். அந்த வகையில் சென்ற வாரம் இந்தியாவில் நடைபெற்ற ரஞ்சி கிண்ணத் தொடரின் மேற்கு வங்கம் - சத்தீஸ்கர் அணிகளுக்கிடையிலான போட்டியில் அமைக்கப்பட்ட ஒரு கள வியூகம் ரசிகர்கள் பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

சத்தீஸ்கர் அணியின் இரண்டாவது இனிங்ஸில் இறுதித் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்வதற்காக மேற்கு வங்க அணியின் ஒன்பது வீரர்களும் சிலிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு கள வியூகம் அமைக்கப் பட்டுள்ளது. இத்தகைய கள வியூகங்கள் துடுப்பாட்ட வீரரைப் பதட்டமடையச் செய்வதோடு போட்டியில் பரபரப்பையும் ஏற்படுத்த வல்லன.

மேற்கு வங்க அணி சார்பில் பந்துவீசிய முகமட் சமி மற்றும் அசோக் டிண்டா ஆகியோர்களின் விருப்பத்திற்கு அமைவாக அணித்தலைவரான மனோஜ் திவாரி இத்தகைய கள வியூகத்தை அமைத்துள்ளார். இதன்படி இறுதி விக்கெட்டான பங்கஜ்குமார் 2 ஓட்டங்களுடன் அசோக் டிண்டாவின் பந்துவீச்சில் ஸ்லிப்பில் நின்ற ஸ்ரீவற்ஸ் கோஸ்சாமியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்துள்ளார். இதன் மூலம் மேற்கு வங்கம் ஒரு இனிங்ஸ் மற்றும் 160 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

ஆனாலும் இவ்வாறான கள வியூகம் அமைக்கப்படுவது கிரிக்கெட்டில் இது முதன்முறையல்ல. இதற்கு முன்னதாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அபூர்வமாக இரண்டு சந்தர்ப்பங்களில் இதுபோன்ற கள வியூகங்கள் அமைக்கப் பட்டமை பிரசித்தமானது. அந்தவகையில் 1976 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலிய - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் ஒக்லாண்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போதே முதன் முதலாக இந்த வியூகம் அமைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அணியின் தலைவராக விளங்கிய கிறேக் சப்பல் நியூசிலாந்தின் முதல் இன்னிங்சில் இறுதித்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய பீற்றர் பெதறிக்கை ஆட்டமிழக்கச் செய்ய இத்தகைய வியூகத்தை அமைத்து வேகப்பந்து வீச்சாளரான டெனிஸ் லில்லியிடம் அதற்குத் தகுந்தால்போல் பந்து வீசுமாறு கூறியுள்ளார். அன்றைய போட்டியில் பீற்றர் பெதறிக் 4 ஓட்டங்களுடன் டெனிஸ் லில்லியின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளரான றொட்னி மார்ஷிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்திருந்தார்.

இந்தப்போட்டியை 10 விக்கெட்டுகளால் அவுஸ்ரேலியா வென்றிருந்தது.

அதேபோல சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவுஸ்ரேலிய சிம்பாப்வே அணிகளுக்கிடையில் 1999 ஒக்ரோபர் 23 ஆம் திகதி ஹராரேயில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் இத்தகைய வியூகம் அமைக்கப்பட்டுள்ளது. இறுதித்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய டேவிட் முரண்றாவை ஆட்டமிழக்கச் செய்வதற்கு இந்த வியூகத்தை அணித்தலைவரான ஸ் ரீவ்வோ கையாண்டிருந்தார். டேமியன் பிளமிங் வீசிய ஒரு ஓவரில் அவ்விதம் மேற்கொள்ளப்பட்டாலும் அந்த விக்கெட்டை அவரால் கைப்பற்ற முடியவில்லை. இறுதியாக டேவிட் முரண்றாவின் விக்கெட்டை அன்ட்ஷரூ சைமன்ஸே போல்ட் முறையில் கைப்பற்றி இருந்தார். இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்ததையும் ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறந்து விட மாட்டார்கள்.

# முதற் காலடி




இந்த வருடம் ஜூன் மாதத்தில் ஆப்கானிஸ்தானுக்கும் அயர்லாந்துக்கும் ஐ.சி.சியால் டெஸ்ட் அந்தஸ்து அளிக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை இவ்விரண்டு நாடுகளும் தமது அறிமுகப் போட்டியில் விளையாடுவதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை.

இந்நிலையில் கடந்தவாரம் ஒக்லாண்டில் நடைபெற்ற ஐ.சி.சியின் கூட்டத்தில் அயர்லாந்து தனது முதற் டெஸ்ட் போட்டியை பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடவுள்ளமை உறுதியாகி உள்ளது. ஆனாலும் இந்தப்போட்டி நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியாக நடைபெறுமா அல்லது 5 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியாக நடைபெறுமா என்பதில் ஒரு சந்தேகம் நிலவி இருந்தது. ஆனாலும் இந்த டெஸ்ட் போட்டி 5 நாட்கள் கொண்ட போட்டியாகவே எதிர்வரும் 2018 மே மாதம் அயர்லாந்தில் நடைபெறவுள்ளது.

ஆனாலும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தென்னாபிரிக்கா - சிம்பாப்வே அணிகள் மோதிக்கொள்ளும் நான்கு நாட்கள் டெஸ்ட் போட்டியைப் பரீட்சார்த்தமாக நடத்துவதற்கு ஐ.சி.சி அனுமதி வழங்கி இருந்தது. அதன்போது நான்கு நாட்கள் டெஸ்ட் போட்டிகளில் அறிமுக அணிகள் விளையாடுவது 5 நாட்கள் போட்டிகளுக்கான சிறந்த அனுபவமாக விளங்கும் என்றே ஐசிசி கூறியிருந்தது. இந்நிலையில் அயர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறும் அயர்லாந்தின் கன்னி டெஸ்ட் போட்டியை 5 நாட்கள் நடத்துவது சரிதானா என்ற கேள்வியையும் ரசிகர்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. ஆனாலும் அயர்லாந்தின் அறிமுக டெஸ்ட் போட்டியை 5 நாட்கள் போட்டியாக நடத்தி விட்டு இனிவருங்காலங்களில் நான்கு நாட்கள் டெஸ்ட் போட்டிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு ஐசிசி திட்டமிட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

அதேவேளை அயர்லாந்து இதுவரை விளையாடிய சர்வதேச ஒருநாள் போட்டிகளில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடு ஒன்றைத் தோற்கடித்ததென்றால் அது பாகிஸ்தானை மட்டுமே. 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ண முதற்சுற்று ஆட்டத்திலேயே அயர்லாந்து மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




லாகூரில் நாளை (ஒக்ரோபர் 29) நடைபெறவுள்ள இருபதுக்கிருபது போட்டியில் கலந்து கொள்ள இலங்கை வீரர்கள் மறுத்தது சர்ச்சைக்குரிய விடயமாகி உள்ளது. அதிலும் லாகூர் போட்டியில் பங்குபற்ற முடியாத காரணத்தாலேயே இருபதுக்கிருபது போட்டியின் தலைவரான உபுல் தரங்கவை இத்தொடரில் இருந்து நீக்கியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தானில் தீவிரவாதத் தாக்குதல்களினால் இலங்கை அணி நேரடியாகவே பாதிக்கப்பட்ட நிலையில் எந்தவொரு வீரரையும் வற்புறுத்தி அணியில் சேர்க்க முடியாது. போட்டிகளின் பொழுது தனிப்பட்ட காரணங்களுக்காக வீரர்கள் விலகுவதை ஏற்றுக்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் சபை பாதுகாப்பின்மையை காரணங்காட்டி விலகும் வீரர்களை நீக்குவது சரியெனத் தோன்றவில்லை.1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இலங்கையில் அவுஸ்ரேலியாவும் மேற்கிந்தியத்தீவுகளும் விளையாட மறுத்த போது பாகிஸ்தான் வந்து விளையாடிச் சென்றது. இதற்குக் கைமாறாகவே தற்போது அதே சூழ்நிலை நிலவும்

# விமர்சனத்துக்குள்ளான முடிவு

பாகிஸ்தானுக்கு உதவ இலங்கை கிரிக்கெட் சபை நினைக்கின்றது. எனவே செய்நன்றி மறக்கக் கூடாது என்பதற்காக வீரர்களின் உயிரைப் பணயம் வைப்பது ஏற்புடையதா என்ற கேள்வியையும் ஒருபுறம் இது தோற்றுவித்துள்ளது. அதேசமயம் 2009 ஆம் ஆண்டு இலங்கை வீரர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பிறகு பாதுகாப்பை காரணம் காட்டி ஒரு நாடுமே செல்லாத காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட்சபையும் அங்கு விளையாட ஆர்வம் காட்டவில்லை. ஆனாலும் ஒப்பீட்டளவில் தற்போது பாகிஸ்தானில் முன்னரைவிட பாதுகாப்பான சூழல் உணரப்படுவதோடு வீரர்களுக்கு அதிஉயர் பாதுகாப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் இறுதிப்போட்டி லாகூரில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றதையும் சென்றமாதம் உலகப் பதினொருவர் அணி அங்கு இருபதுக்கிருபது தொடரில் விளையாடியதையும் கருத்திற்கொண்டு இத்தகைய ஒரு முடிவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை வந்திருக்கலாம்.அத்தோடு இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவரான திலங்க சுமதிபால ஆசிய கிரிக்கெட் பேரவை அபிவிருத்திக் குழுவின் நிறைவேற்று அதிகாரியாக தற்போது விளங்குவதனால் இப்போட்டியை லாகூரில் நடத்துவதற்கான தேவைப்பாடு அவருக்குண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 28.10.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.